# நாம் நகரத்தார்

சமூக இணையதள மின்னிதழ்

இலவச வெளியீடு

மலர் : 4 இதழ் : 6 செப்டம்பர் 2025



SREE VISALAM CHIT FUND LTD.
SVCF
ESTD 1947
REGD. TIRUNELVELI

# உங்கள் கனவு இல்லம் இனி ஒரு கனவு இல்லை.

## இன்றே சேமிக்க துவங்குவோம்!!!

1 இலட்சம் சீட்டு
முதல்
கோடி சீட்டு
வரை....




ஸ்ரீ விசாலம் சிட் ஃபண்ட் லிமிடெட்




நம்பிக்கை, நாணயம், நேர்மை
நிலையான தன்மையுடன், வாடிக்கையாளர் சேவையில்...

எங்களை, ஊக்குவிக்கும் வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் நன்றி

+91 8667003356 | 04565 283 477   WWW.SREEVISALAM.COM

SREE VISALAM CHIT FUND LTD.
SVCF
ESTD 1947
REGD. TIRUNELVELI

பதிவு அலுவலகம்:
திருநெல்வேலி - 627006. போன்: 0462-2333474

நிர்வாக அலுவலகம்:
பள்ளத்தூர் - 630107. போன்: 04565 283477

மத்திய அலுவலகம்:
219, அண்ணா சாலை, சென்னை - 600002.
போன்: 044 28525344, 044 28523386

https://www.sreevisalam.com/
போன்: 86670 03356

# வாழ்த்தி மகிழ்வோம்...

அன்பார்ந்த வாசகர்களே..

நமது மின்னிதழில் வாழ்த்தி மகிழ்வோம் பகுதியில் வாசகர்கள் இனி தங்கள் குடும்ப உறுப்பினர்கள் திருமணம், பிறந்த நாள், சஷ்டியப்த பூர்த்தி, சதாபிஷேகம் இன்னும் பல இனிமையான தருணங்களை உலகளாவிய நமது நகரத்தார் வாசகர்களோடு பகிர்ந்து மகிழலாம்.

**அட்டைப்படம் மற்றும் இதழில் ஒரு பக்க செய்திக்கான கட்டணம் : ரூபாய் 3000 மட்டும்**

**இதழில் ஒரு பக்கச்செய்தி : ரூபாய் 500 மட்டும்**

இனிய தருணங்களை உலகளாவிய நமது நகரத்தார் குடும்பங்களோடு பகிர்ந்து கொள்ளுங்கள்.

தங்களது இல்ல நிகழ்வுகளை வெளியிட
இதழின் மின்னஞ்சல் முகவரி
naamnagarathar@outlook.com
அல்லது
96590 32994 என்ற
எண்ணில் தொடர்பு கொள்ளவும்



# நாம் நகரத்தார்

சமூக இணையதள மின்னிதழ்

செப்டம்பர் 2025

மலர் : 4 இதழ் : 6

இலவச வெளியீடு

**பதிப்பாசியர்**

இராம.சொக்கலிங்கம்

நற்சாந்துபட்டி

---

**இதழாசிரியர்**

உமையாள்

---

**இதழ் வடிவமைப்பு**

ச. தஸ்லிம்

---

**புத்தக ஆக்கம்**

சேனா டிஜிட்டல்

மின்நூல் வெளியீட்டாளர்கள்

172 – D மேட்டுப்பாளையம் சாலை

நீலகிரி பெர்டிலைசர் காம்பவுண்ட்,

கோயம்புத்தூர் – 641043.

---

**விளம்பரம் தொடர்புக்கு**

97917 76534

---

கட்டுரைகள் மற்றும் இதர

படைப்புகளுக்கு

படைப்பாளர்களே பொறுப்பு.

விளம்பரங்கள் விளம்பரதாரரின்

பொறுப்பில் வெளியாகின்றன.


PM
SWITCH TO THE FUTURE
PALLATHUR MOTORS LLP
PETROL RIDER LIFE
SALARY வந்தா உடனே , பெட்ரோல் - க்கு ஒரு 2000 to 4000 தனியா வைக்கணும் !
PETROL STATION
ELECTRIC RIDER LIFE
SALARY வந்தா உடனே, Extra 2000 to 4000 Saving - ல கோல்டு வாங்கலாமா இல்ல, சீட்டு போடலாமானு யோசிக்கலாம்...!
ELECTRIFY YOUR JOURNEY NOW
Go far and wide with just a single charge
LECTRIX
Book Your TEST DR!VE Now!!
மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் +91 80157 73735
பள்ளத்தூர் மோட்டர்ஸ், எண் 151, வி.ஓ.சி வீதி, காரைக்குடி - 630 001

# வளவுக்குள்...

அன்பு வாசகர்களுக்கு...

வணக்கம்....!

நகரத்தார்கள் வாசிப்பின் ஓர் அங்கமாக வலம் வரும் நமது மின்னிதழுக்கு ஆதரவு தரும் அனைவருக்கும் முதற்கண் எங்களின் பணிவான நன்றி!

பொதுவாக நமது செட்டிநாட்டில் ஒவ்வொரு தமிழ் மாதத்திலும் ஒவ்வொரு விழாக்கள் நிகழும். அதில் வரும் புரட்டாசி மாதம் சற்று விசேஷம் நிறைந்த மாதம்.

பொதுவாக புரட்டாசி மாதத்தின் போது தான் வெயிலும், காற்றும் குறைந்து மழை ஆரம்பிக்கும் காலமாக உள்ளது. இதனால் இதுவரை பூமி வெயிலால் சூடாகி இருக்கும். மழை பொழியும் போது, அதை ஈர்த்து புவியின் வெப்பத்தை குறைக்கும் பொருட்டு, தன்னுள் இருக்கும் சூட்டை வெளியில் விட ஆரம்பிக்கும். இதனால் புரட்டாசி மாதம் சூட்டை கிளப்பி விடும். இது வெயில் காலத்தில் சூடான காலநிலையைக் காட்டிலும் மிக மோசமான விளைவுகளை தரக் கூடியது. இந்த காலத்தில் அசைவம் சாப்பிடுவதால், உடல் சூட்டை மேலும் அதிகரிக்கச் செய்து, நம் உடல் நலனை மேலும் பாதிக்கச் செய்யும்.

இந்த மாதத்தில் செட்டிநாட்டுப் பகுதி மக்கள் பெரும்பாலும் அனைவரும் சைவ உணவே எடுத்துக் கொள்வர். புரட்டாசி மாதம் சனிக்கிழமைகளில் காலையில் நீராடி விரதம் இருந்து பெருமாளை வணங்கி அன்றே செய்த உணவை வாழை இலையில் உண்பார்கள். இந்த காலத்தில் ஏற்படும் உடல் நல பிரச்னையை, பெருமாள் கோயிலில் கொடுக்கப்படும் துளசி தீர்த்தம் கட்டுப்படுத்தும் ஆற்றல் மிக்கது. இதனால் தான் புரட்டாசி மாதத்தில் விரதம் இருந்து பெருமாள் கோயிலுக்கு செல்ல வேண்டும் என முன்னோர்கள் ஒரு பழக்கத்தை வைத்துள்ளனர்.

இந்த மாதத்தில் நம் செட்டிநாட்டுப் பகுதியெங்கும் ஏடு படித்தல் (இராமாயணம் படித்தல்) நிகழும். இராம காவியம் நமக்கு சகோதர ஒற்றுமையை எடுத்துக் காட்டுவதால் குடும்ப ஒற்றுமை பலப்பட வேண்டும் என்பதை மனதில் கொண்டு நம் முன்னோர்கள் இந்த நிகழ்வை தொடங்கிவைத்தனர்.

மேலும் ஊர் பொதுவாக இராமாயணம் படிப்பது நிகழ்வதன் நோக்கம், அனைத்து மக்களும் ஒற்றுமையாக இருக்கவேண்டும். தவறான வழியில் சென்றால் ஏற்படும் விளைவுகளை இராமாயண கதையின் மூலம் உணர்ந்து நல்வழியில் செல்லவேண்டும் என்ற நோக்கில் நிகழ்த்தப்படுகிறது.

நகரத்தாரின் பண்பாட்டினை இன்றைய தலைமுறையினர் அறியும் வண்ணமும், நகரத்தார்களின் வாசிப்பை வளர்க்கும் விதத்திலும் தொடரும் எங்களது முயற்சிக்கு தங்கள் அனைவரது ஆதரவும் அவசியம். வாசகர்கள் எந்நேரத்திலும் எப்போதும் மின்னிதழை வாசிக்க ஏதுவாக மின்னிதழின் MOBILE APP தற்போது உலகளாவிய பாட்டில் உள்ளது. இதழை தொடர்ந்து வாசிப்பதோடு மற்ற நகரத்தார்களுக்கும் அறிமுகம் செய்யுங்கள்.

இதழ் குறித்த தங்கள் கருத்துக்கள், ஆலோசனைகள் மற்றும் தங்களது படைப்புகளை naamnagarathar@outlook.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்.

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.

நன்மக்கள் உள்ளமெலாம் நல்லொளியால் நிரம்பட்டும்,
நன்னெறியால் நகரத்தார் குலம் நாளும் செழிக்கட்டும்..!



அன்புடன்

இராம.சொக்கலிங்கம்
பதிப்பாசிரியர்



உ

# திருச்சி ஸ்ரீ வளத்தி சிட்பண்ட்ஸ் (பி) லிட்.

## வளத்திஸ்ரீ சிட்பண்ட்ஸ் (பி) லிட்.

## ஸ்ரீ முத்துமீனா சிட்பண்ட்ஸ் (பி) லிட்.

பொதுமக்களிடமிருந்து எந்தவிதமான டெபாசிட்களும் பெறுவதில்லை

எங்களிடம் நடைபெறும் சீட்டின் மதிப்பு

ரூ. 1,00,000/- முதல்

ரூ. 30,00,000/- வரை

அதிகபட்ச உச்சவரம்பு 30% முதல் 40%வரை

பல்லாண்டு கால நம்பிக்கை ! நாணயம் ! நேர்மையான அணுகுமுறை!

இன்றைய சேமிப்பே, நாளைய வளர்ச்சியின் அடையாளம்.

0431-2760064
0431-7968005

துவக்கம் 2005

94439 86143

# TRICHY SHREE VALATHI CHITFUNDS (P) LTD.

## VALATHI SHRI CHIT FUNDS (P) LTD.,

## SRI MUTHUMEENA CHIT FUNDS (P) LTD.,

"ஸ்ரீ வளத்தி"
C - 145 - D, முதல் தளம், N.V.V. கேஸ்டில்
தில்லைநகர் 6-வது கிராஸ் - கிழக்கு
திருச்சிராப்பள்ளி - 620 018.
Cell : 94439 86143

"ஸ்ரீ வளத்தி"
9/1, (4/1),அருணோதயா அபார்ட்மென்ட்
G-1, தரைத்தளம், லோகையா தெரு,
சாலிகிராமம், சென்னை - 600 093
Cell : 91235 71029

எண். 1, முதல் தளம், பழைய சொக்கநாதர் கோவில் தெரு,
குமார் மெடிக்கல்ஸ் மாடியில்
மதுரை - 625 001. Cell : 89034 90064.

tvcfpl@gmail.com www.valathichitfunds.com

★ வாய்மையே வெல்லும் ★

## இந்த இதழில்....


**நமது சிந்தனைக்கு**

- நம்மைச்சுற்றி இருப்போர் சுகமா? இல்லை சுமையா?
  –கவிஞர் அரிமழம் ப.செல்லப்பா. .................................... 11

**சிறப்புப் பக்கம்**

- பார் ஆண்ட பாதுகை .................................... 18

**சிறுவர் பக்கம்**

- மழலை மழைத்துளிகள்..!!! கல்லல் மீ.மணிகண்டன் Texas, USA .......... 29

**மொழி**

- வாங்க பேசலாம் ..! – – பேரா. கு. அன்புமெய்யப்பன் .................... 31

**கவிச்சோலை**

- ஆசிரியர் – அரு. சிவகாமி இராமனாதன் ஒக்கூர் .................... 39
- ஏ.வி.எம் என்றொரு சகாப்தம் – கவிஞர் எம்.சோலை காரைக்குடி........... 48

**வாழ்வியல்**

- பெண் கதவு... ஆண் பூட்டு..! – சேவு.முத்துக்குமார் காரைக்குடி ............ 40

**படித்ததில் பிடித்தது**

- உங்களுக்கு எதிரி 'நீங்கள்' தான்! .................................... 43

**சமையல்**

- பக்கோடா மோர்குழம்பு .................................... 50

**நிதி மேலாண்மை**

- பணம் சம்பாதிப்போம் பங்குச் சந்தையில்...
  – கார்த்திக் முத்தப்பன் (கண்டனூர்) – க.ஹர்ஷவர்த்தினிஸ்ரீ .............. 55

**ஜோதிடம்**

- நீங்கள் எப்படி...கும்ப லக்னம்..! – ஜோதிடர் எல்லி .................... 68

உடல் பிணிக்கு மட்டுமல்ல, வினைப் பிணிகளுக்கும்
உற்ற மருந்து வேல்மாறல் மகா மந்திரம்.

# வினைகள் தீர்க்கும்
# வேல்மாறல்
## மகா மந்திரம்

( வள்ளிமலை சச்சிதானந்த சுவாமிகள்
தொகுத்தருளியது )




**தினமும் பாராயணம்
செய்யும் வகையில் எளிய நடையில் புத்தகமாக**

- வேல் வழிபாடு
- வேல் மாறல் பொருள் விளக்கம்
- வேல் மாறல் பாராயணம் செய்யம் முறை
- முருகனின் முதற்கற்றளிக் கோயில்
  என பல்வேறு தகவல்களுடன்

விலை
ரூபாய்
**46/-**
தபால் செலவு தனி

வெளியீடு : அனுஷம் புக்ஸ் - கோவை

புத்தகத்தினை ஆர்டர் செய்ய :

**96590 32994**

எண்ணிற்கு வாட்சப் செய்யவும்

**தினமும் வேல் மாறல் பாராயணம் செய்து கலியுக கடவுள் கந்தன் அருள் பெறுவோம்**

# நம்மைச்சுற்றி இருப்போர்

## சுகமா? இல்லை சுமையா?






– கவிஞர் அரிமழம் ப.செல்லப்பா.

தொழில் தொடங்கி நடத்தும் பலரும், மிகுந்த நம்பிக்கையோடு தங்களுக்கு உறுதுணையாகவும், நம்பிக்கை மிக்கவர்களாகவும் இருப்பார்கள் என நினைத்து தங்களின் உறவுகளை, சொந்த ஊர் மக்களையும் தங்களின் நிறுவனத்தில் வேலைக்கு அமர்த்திக் கொள்கிறார்கள்




தொடக்கத்தில் தன்னுடைய முன்னேற்றம் ஒன்றே முக்கியம் என்று கருதி நேரம், காலம் பார்க்காமல், இரவு, பகல் கருதாமல் தேனியைப் போல் சுற்றி சுற்றிச் சுழல்வார்கள். தன்னுடன் இருப்போர் தனது உயர்வை தங்களின் உயர்வாகக்கருதி, தனக்கு என்றும் உண்மையாகத் திகழ்வார்கள் என்று நினைத்து, அவர்களுக்கு சகல அதிகாரத்தையும் வழங்கி மகிழ்வார்கள்.

நாட்கள் செல்லச்செல்ல, தங்களின் நிலை உயர உயர,வேலைக்கு வந்தோர் தங்களையே முதலாளி என்று நினைத்துச் செயல்படத் தொடங்கி விடுவார்கள். தாங்கள் சொன்னதை மட்டுமே முதலாளி செயல் படுத்துவார் என்ற எண்ணத்தை மற்றவர்களின் மனதிலே விதைப்பார்கள்.


இந்த நிலைக்கு அவர்கள் மாறிவிட்டார்கள் என்ற உண்மைகூட முதலாளிக்குத் தெரியாமல் போய் விடுகிறது. இப்படிப்பட்ட சில ஏமாற்றுக் காரர்கள் தன்னை உயர் நிலைக்கு கொண்டுவர வேண்டும் என நினைத்து அழைத்து வந்த முதலாளிக்கே எதிராக மாறிவிடும் நிலையும் உள்ளது.

பல நிறுவனங்களில் முக்கியப் பொறுப்புகளில் தனது பிள்ளைகளை அமர வைப்பதைவிட, மைத்துனரை அமர்த்தி வைத்து அழகு பார்ப்பது அதிகமாகிவிட்டது. ஏன் இப்படிப்பட்ட ஒரு பார்வை எல்லா மனிதர்களிடமும் உள்ளது என்று ஆராய்ந்து பார்த்தால், உறவு அல்லாதவர் களை விட உறவுக்காரர்கள் நமக்கு எந்த விதமான துரோகமும் செய்ய மாட்டார்கள் என்று உறுதியான நம்பிக்கையே காரணம்.



இன்றைக்குப் பல்வேறு பல்பொருள் அங்காடிகளை தமிழகத்தின் பல பெரிய நகரங்களில் தொடங்கி நடத்தி வருகின்ற தென் தமிழகத்தைச் சேர்ந்த ஒரு குறிப்பிட்ட சமூகத்தினர், தங்கள் நிறுவனத்தில், தங்கள் ஊர்க்காரர்களை வேலைக்கு அமர்த்திக் கொள்கிறார்கள். அவர்களுக்கு சம்பளம் மட்டுமே கொடுப்பார்களே தவிர, ஒருநாளும் உயர் பொறுப்புகளில் அமர வைத்து அழகு பார்ப்பதில்லை. ஏன் தெரியுமா? தங்களின் சொந்த ஊர் மக்களுக்கு வேலை கொடுத்து, அவர்களை வாழ வைப்பதோடு நிறுத்திக் கொள்கிறார்களே தவிர. அதைத்தாண்டி ஒரு நாளும் அவர்கள் மீது கனிவோ, கருணையோ, நம்பிக்கையோ கொள்வதில்லை. இதன் காரணமாக முதலாளி களுக்கு எந்த இழப்பும், ஏமாற்றமும், தோல்வியும் ஏற்படுவதில்லை.

தன்னைச்சுற்றியிருப்பவர்கள் நல்லவர்களா? நம்பிக்கைக்கு உரியவர்களா? வல்லவர்களா? இல்லை ஏமாற்றுக்காரர்களா? என்பதையெல்லாம் யார் ஒருவர் அறிந்து உணர்ந்து கொள்கிறாரோ அவரே வணிகத்தில் வெற்றியைப் பெறமுடியும்



சென்னையில் அரும்பாடு பட்டு,உழைத்து முதலாளியான ஒருவரை நான் நன்கு அறிவேன். அவர் உதவும் பண்பினர். இல்லையென்று தன்னை நாடிவந்தோரின் நிலையறிந்து, தன்னால் எந்தளவு உதவுமுடியுமோ உதவியவர். பெண் பிள்ளைகளின் திருமணத்திற்கு பண உதவி செய்தவர். உயர் கல்வி படிப்பதற்கு உறவுக்காரப்பையன் களுக்கும்,பெண்களுக்கும் நிதியுதவி அளித்தவர். அப்படிப்பட்ட நல்ல மனதுக்குச் சொந்தக்காரர் தனது தொழில் மூலம் பணத்தைச் சம்பாதித்துக் காட்ட வேண்டும் என்ற ஆசையில் நிறுவனத்தைத் தொடங்கி சம்பாதித்த பணம் அவர் எதிர்பார்த்ததை விட அதிகமாக பெருகவே மகிழ்ச்சியும் பெருமையும் அடைந்தார்.

தனது நிறுவனத்தை நடத்திச் செல்ல, தன் மனைவியின் உறவுகளை தனது நிறுவனத்தின் கிளைகளிலும், தலைமை அலுவலகத்திலும் முக்கியமான பதவிகளில் வேலைக்கு அமர்த்தினார். நாளடைவில் தான் ஈட்டிய செல்வம் எல்லாம் வரப்புகளைத் தாண்டி வயலுக்கு வெளியே ஓடிக்கொண்டிருப்பது தெரியாமல்,வேலையில் உள்ள உறவுகளும், நம்பி அமர்த்திய சிலரும் தனக்கு அளிக்கின்ற கௌரவத்தில் மயங்கிப் போய் மகிழ்ந்திருந்தார். அந்த மயக்கத்தில் தன்னுடைய முயற்சி, திறமை உழைப்பு அனைத்தையும் தன்னைத்தவிர பிற மனிதர்களே அனுபவிக் கிறார்கள் என்பதை அறியாமல் இறுதி வரை திகழ்ந்தார். தனது இறுதிக்காலத்தில் நயவஞ்சகர்களின் சூழ்ச்சியை அறிந்த நிலையில்,வயது முதிர்வால் அவர்களுக்கு எதிராக எந்தவிதமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியாமல்,தனது இயலாமையை எண்ணி வருந்தினார்.



தன்னம்பிக்கையோடு தனது நிர்வாகத் திறமையோடு மீண்டும் பணத்தை நோக்கியே அவரது பயணம் தொடர்ந்தது. இப்போதும் வெற்றி. அப்படி வெற்றி பெற்ற போதிலும் வெற்றி பெற்ற களிப்பில் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொள்ளும் போது,அவர் அனுபவிக்க மறந்த விஷயங்கள் அத்தனையும் நினைவுக்கு வருகிறது. காலம் நேரம் இளமை போனால் வராது. அதில் அனுபவிக்க தவறிய விஷயங்களை இனியும் அனுபவிக்க முடியாது. என்றெண்ணி கலங்கி நின்றார். ஆனாலும் அவரை சூழ்ந்திருந்த கூட்டம் அவரைத் தொடர்ந்து ஏமாற்றியே வந்தது.

தமுதலாளிக்கு மூப்பு வந்தது, நோய் வந்தது, இயலாமை வந்தது என்று அறிந்த நொடியே, இத்தனை நாட்களாக எதற்காக எதனை எதிர்பார்த்து அவரைச் சுற்றி இருந்தார்களோ, அந்த உறவுக்கார கூட்டத்தார் அனைவருமே, அந்த இடத்தை விட்டு அகன்று,

கடைசியாக இருப்பதை ஆளுக்கு ஒரு கையில் எப்படியெல்லாம் அள்ள முடியுமோ அப்படி அள்ளிக் கொண்டு போய் விட்டார்கள்.

இதுபோன்ற நிகழ்வுகள் தான் பல்வேறு நிறுவனங்களிலும் பெரும்பாலும் நடை பெறுகிறது. ஏதோ ஒன்று அல்லது இரண்டு நபர்கள் இறுதிவரை தனக்கு வாழ்க்கை கொடுத்த முதலாளிக்கு உண்மையாக இருந்திருக்கக்கூடும்.

எனவே நம்மைச்சுற்றி நம்மோடு இருப்பவர்கள் என்றைக்கும் நமக்குச் சுமையாகத் தான் இருந்துள்ளார்கள் என்பதே உண்மை.

இன்னுமொரு தலைப்போடு மீண்டும் உங்களைச் சந்திக்கிறேன் நண்பர்களே!என்ன சரிதானே!

கருத்துப் பகிர்வுக்கும், தொடர்பிற்கும்
9791033913,
aamchennai@gmail.com



# ஸ்ரீ நித்யகல்யாணி
## சிட்பண்ட்ஸ் (பி) லிமிடெட்

Sign of Commitment

SRI NITHYAKALYANI CHIT FUNDS (P) LTD.

NKF

Our culture is financial Discipline

Money is Easier when your
Proactive Plan with Nithyakalyani







**Sri Nithyakalyani Chit Funds(P) Ltd.,**
#22, Lakshmi Road, TVS Nagar,
Madurai - 625 003.
Ph.No: 0452 - 2692680, Mob.No: 9786300304,
E-mail : sncfco@gmail.com

## Branches

| | | | |
|---|---|---|---|
| Madurai Main 98430 93250 | Trichy 98432 91654 | Arasaradi/mdu 73391 25777 | Thirunagar/mdu 84899 10191 |
| Dindigal 98432 91652 | Coimbatore 82200 52338 | Erode 75581 99888 | Srivilliputhur 70944 61192 |
| Anna Nagar/mdu 98432 91653 | Reserveline/mdu 98430 93256 | Aruppukkottai 73589 91777 | Dindigul (Regl.) 75581 99777 |



# பார் ஆண்ட பாதுகை

–இராம.சொக்கலிங்கம், நற்சாந்துபட்டி

தற்காலத்தில் பணம், சொத்து, பதவி போன்ற வற்றிற்காக எந்த நிலைக்கும் செல்ல மக்கள் தயங்குவதில்லை. சொத்து ஆசையில் பெற்ற தாய், தந்தையரையே இழிவுப்படுத்தும் மகன், மகள்கள் பெருகியுள்ள காலத்தில்,நிலம், பொன், பொருள் போன்றவற்றிற்காக கீழ்த்தரமான செயலை செய்யும் மக்கள் பெருகிவரும் வேலையில், இவை அனைத்தும் நிலையானது இல்லை என்பதை அவசியம் உணர வேண்டும்.

மேற்கண்ட பணம், பொன், பொருள், போன்ற வற்றை துச்சமாக மதித்து அன்பு, பாசம், பந்தம், இறைபக்தி போன்றவற்றிற்கு முக்கியத்துவம் தந்த நமது புராணங்களை நமது சந்ததியினருக்கு கற்றுக் கொடுக்காததன் விளைவே மேற்கண்ட நிலைக்கு தற்போது நாம் வந்து நிற்கிறோம் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

அக்காலத்தில் நமது புராணக்கதைகளை குழந்தைகளுக்கு சொல்லி வளர்த்தனர், வளர்ந்த பிள்ளைகளும் பண்புடன் வளர்ந்து வந்தனர். அதனால் அக்காலத்தில் அனாதை இல்லங்களும், முதியோர் இல்லங்களும் இல்லை.

ஆனால் இன்று தெருவிற்கு ஒரு முதியோர் இல்லம், பெரும்பாலான வழக்குகள், "பிள்ளைகள் சொத்துக்காக அடிக்கிறார்கள், ஆபாசமாக திட்டுகிறார்கள்" என்று வயதான பெற்றோர் காவல் நிலையத்தில் புகார் கொடுப்பது, போன்ற சம்பவங்கள் அதிகரிக்கின்றன.



இந்து சமய பண்டிகையின் முக்கியத்துவத்தை பல்வேறு நீதிக்கதை, புராணக்கதையின் மூலம் அறிந்து வளர்ந்த பிள்ளைகள், இந்துமத பண்டிகையை மிகுந்த ஈடுபாட்டுடன் கொண்டாடினர், குடும்பம் சூழல் உறவுகள் சூழ தங்க ளுக்குள் அன்பை வளர்த்துக் கொண்டாடும் ஒரு இணைப்பு விழாவாகவே நமது இந்து மத விழாக்கள் திகழ்ந்தது.

ஆனால் இக்கால தலைமுறையினருக்கு இந்துமத பண்டிகையின் மகத்துவத்தை அறிந்து கொள்ள முடிவதில்லை, விடுமுறை தினமாகவே நினைக்கின்றனர்.

இந்த நிலை மாற வேண்டுமென்றால், ஒவ்வொரு பெற்றோரும், நமது இந்து மத விழாக்கள் குறித்தும், இந்துமத தெய்வங்கள் குறித்தும், அன்பு பாசம் போன்றவற்றின் மகத்துவத்தை எடுத்துக் கூறும் புராண இதிகாச கதைகளையும், நிகழ்வுகளையும் நமது சந்ததியினர் அறிந்து கொள்ளுமாறு அவர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும்.




முக்கியமாக இன்றைய முக்கிய பிரச்சனையாக இருக்கும் குடும்ப உறவு சிதையலை போக்க வேண்டுமானால், இராமாயணம் – மகாபாரதம் போன்றவற்றில் உள்ள ஒவ்வொரு பகுதியையும் மிகநுட்பமாக நமது சந்ததியினருக்கு எடுத்து சொல்லவேண்டும்.

குறிப்பாக ராமாயணத்தில் ஒவ்வொரு பகுதியும், ஒவ்வொரு சம்பவங்களும் தற்காலத்திற்கு ஒரு படிப்பிணையை தருவதாக அமைந்துள்ளது.

அதில் ஒரு பகுதியில் பரதன் செய்யும் காரியம், ராமனைவிட உயர்ந்தவனாக உயர்த்தி காட்டுவதாக அமைந்துள்ளது. அதைப் பார்ப்போம். ராமாயணத்தில் பட்டாபிஷேகங்கள் பல நடை பெற்றுள்ளன. ஆனால் அவற்றுள் பரதன் நடத்திய பாதுகா பட்டாபிஷேகமும், ராவணனை வென்று திரும்பிய ராமபிரானுக்கு வசிஷ்டர் மணிமுடி சூட்டிய பட்டாபிஷேகமும் முக்கியமானவை.

இந்த இரண்டனுள் பரதனுக்கு ராமர் அளித்த மரவடிவிலான பாதுகை (காலனி)க்குத் பரதன் நடத்திய பட்டாபிஷேகமே சிறந்தது.



பரதனின் பாதுகா பட்டாபிஷேகத்திற்கு "திரு வடி சூட்டுப் படலம்' என்றும், ராமபிரானுக்கு மணி முடி சூட்டிய பட்டாபிஷேகத்திற்கு "திருமுடி சூட்டுப் படலம்' என்றும் கவிச்சக்கரவர்த்தி கம்பர் பெயரிட்டுள்ளார்.

தசரதர் தம் அருமை மகன் ராம னுக்குப் பட்டாபி ஷேகம் என்று அறிவித்தவுடன் மந்தரையின் போதனையால் மனம்மாறினாள் கைகேயி.

ராமன் மீது தான் கொண்டிருந்த அன்பையும் மறந்து, சம்பராசுர யுத்தக் காலத் தில் தசரதன் வழங்கிய இரண்டு வரங்களில் ஒரு வரத்தால், "பரதனே நாடாள வேண்டும்' என்றும், மற்றொரு வரத்தால் "ராமன் தவக்கோலம் பூண்டு பதினான்கு ஆண்டுகள் கட்டில் வனவாசம் செல்ல வேண்டும்' என்றும் வரம் கேட்டாள்.

தசரதன் வரம் கொடுத்துவிட்டு, ராமன் பிரிவைத் தாங்க மாட்டாமல் மரண மூர்ச்சையடைந்து விட்டார். கைகேயி ராமனை அழைத்து வரச் செய்து, "பரதன் நாடாளவேண்டுமென் றும் நீ பதினான்கு ஆண்டுகள் காட்டில் வனவாசம் செல்ல வேண்டுமென்றும் தசரதன் ஆணையிட்டதாக" கூறினாள்.

சிற்றன்னையின் சொல்லைக் கேட்டு சிறிதும் துயருறாமல், எதிர்த்து ஏதும் கேளாமல், அக் கணமே ராஜவாழ்வை துறந்து தவக்கோலம் பூண்டு தம்பியுடனும் சீதையுடனும் ராமன் காடு சென்றார்.

அப்போது கேகய நாடு சென்றிருந்த பரதன் அயோத்தி வந்து, அண்ணன் ராமர் வன வாசம் சென்றதையறிந்து தாய் கைகேயி மேல் கோபம் கொண்டு இழித்தும் பழித்தும் பேசினான். "என் அண்ணன் ராமரை இப்பொழுதே அழைத்து வந்து மணி முடி சூட்டுவேன். அவர் வரமறுத் தால், அவர் பாதங்களிலேயே என் உயிர் போக்கிக் கொள்வேன்" என்று பரதன் காட்டிற்கு புறப்பட்டான்.

அவனுடன் குலகுரு வசிஷ்டரும், தாய்மார்கள் மூவரும், நால்வகைப் படைகளும், அயோத்தி மக்கள் அனைவரும் புறப்பட்டனர்.

பரதனுடன் வந்த அனைவரும் கங்கைக் கரைக்குச் சிறிது தூரத்தில் வந்து கொண்டிருந்தனர்.

கங்கைக் கரைத் தலைவனாகிய குகன், ராமர் மீது அளவில்லா அன்பு கொண்டவன். அதனால் பரதனும், படைவீரர்களும் வருவதைப்பார்த்து,"ராமர் பதினான்கு ஆண்டுகள் வனத்தில் கழித்துவிட்டுப் பின் நாட்டிற்கு வந்து முடிசூடிக் கொள்வார். ஆதலால் இப்போதே அவரைப் போரிட்டுக் கொன்றுவிட வேண்டுமென்று நினைத்தே பரதன் படையுடன் வருகிறான்' என்று மனத்தினால் எண்ணி; பரதனுடன் போருக்கு ஆயத்தமானான்.


பரதன் படைகளுடன் கங்கைக் கரையை நெருங்கி வந்தான். அவன் தவக்கோலம் கண்டு அவன் மேல் அன்பு ததும்ப எதிர் நோக்கி வந்தான் குகன்.

ராமனின் தம்பி பரதனும், ராமனால் 'தம்பி' என்றழைக்கப்பட்ட குகனும் ஒருவரை ஒருவர் வணங்கிக் கொண் டனர். அப்பொழுது குகன், "பரதா! நீ நாட்டை ஆளாமல் தவக்கோலம் பூண்டு வந்திருப்பது ஏன்?" என்று வினவினான்.

அதற்கு, "குகனே! இவ்வுலக மெல்லாம் ஆட்சி செய்துவந்த என் தந்தை தசரதர், நீதி முறைப்படி மூத்தவனுக்குத்தான் முடிசூட்ட வேண்டுமென்ற மரபை மாற்றி இளை யவனான எனக்கு நாட்டைஆளும் பொறுப்பைத் தந்தார். என் தந்தையின் ஆணையை மாற்றி, அண்ணன் ராமரை அழைத்துச் சென்று முடிசூட்ட வேண்டும் என்று வந்தேன் என்று பரதன் கூறினான்.

பரதன் கூறியதைக் கேட்ட குகன், ""பரதா! உன் தாய் கேட்ட வரத்தினால் உன் தந்தை கொடுத்த நாட்டை ஆளுதல் அறமோ, நீதியோ அல்ல என்று கருதி தவக்கோலம் பூண்டு வந்த உன் உயர்ந்த பண்பை நினைத்தால் ஆயிரம் ராமர்கள் சேர்ந்தாலும் உன் ஒருவனுக்கு ஈடாக மாட்டார்கள்" என்று வியந்து கூறினான்.

இதனை, "ஆயிரம் இராமர் நின் கேழ் ஆவரோ தெரியினம்மா" என்று பாடியுள்ளார் கம்பர்




இந்நிகழ்விற்கு பின் ராமனை சந்தித்த பரதன் நாடாள அழைப்பு விடுத்தும், தந்தையின் வாக்குப்படி ராமன் தன் வனவாசத்தில் பிடிவாத மாக இருந்தான்.

எவ்வளவு வற்புறுத்தியும் ராமன் நாடாள ஒப்புக் கொள்ளாததால், ராம னின் மரப் பாதுகை (செருப்பை) பெற்று அதை சுமந்துக்கொண்டு தன்நாட்டிற்கு வந்த பரதன், அந்த பாதுகைக்கு பட்டாபிஷேகம்செய்து அரியணையில் அமர்த்தி அழகு பார்த்தான்.

பொன், பொருள், அரசாங்கம் கிடைத்தும் அதில் நாட்டம் செல்லாமல் ராமன் மீது வைத்த பாசமும், அன்பும் அவனை கோடி ராமனுக்கு ஈடானவனாக மாற்றியது.

பரதனின் இந்த பண்பு அயோத்தி மக்கள் ராமனுக்கு கொடுத்த மரியாதைவிட கோடி மடங்கு மரியாதையை பரதனுக்கு கொடுத்தனர்.



அன்புக்கு உதாரணமான இந்நிகழ்வை இன்று நமது பிள்ளைகளுக்கு சொல்லிக் கொடுப்பது மிக அவசியமாகும். பொன், பொருள், மண், பதவி தேவைதான் ஆனால் அதைவிட அன்பு, பாசம், மரியாதை, மானம் இவை மிக மிக முக்கியம்.

இதனை கருத்தில் கொண்டு தான் புரட்டாசி மாதத்தில் நம் செட்டிநாட்டுப் பகுதியெங்கும் ஏடு படித்தல் (இராமாயணம் படித்தல்) நிகழும். இந்த நிகழ்வு அனைத்து சமூகத்தவர்களாலும் நிகழ்த்தப்படும்.

இராமாயணம் படிப்பதில் ஒரு சூட்சமம் வைத்திருந்தனர் நம் முன்னோர்கள். இராம காவியம் நமக்கு சகோதர ஒற்றுமையை எடுத்துக் காட்டுகிறது. நம் செட்டிநாட்டில் முன்பு வீட்டில் ஐந்து அல்லது ஆறு பிள்ளைகள் இருக்கும். அவர்கள் ராமன், லெட்சுமணன், பரதன், சத்ருகன் ஆகிய நால்வர் போன்று ஒற்றுமையாய் வாழவேண்டும் அறவழியில் நடக்கவேண்டும் என்பதையும் குடும்ப ஒற்றுமை பலப்பட வேண்டும் என்பதை மனதில் கொண்டு இந்த நிகழ்வை தொடங்கிவைத்தனர் .



மேலும் ஊர் பொதுவாக இராமாயணம் படிப்பது நிகழ்வதன் நோக்கம், அனைத்து மக்களும் ஒற்றுமையாக இருக்கவேண்டும். தவறான வழியில் சென்றால் ஏற்படும் விளைவுகளை இராமாயண கதையின் மூலம் உணர்ந்து நல்வழியில் செல்லவேண்டும் என்ற நோக்கில் நிகழ்த்தப்படுகிறது.

நம் ஐயாக்களும், ஆயாக்களும், அப்பத்தாக்களும் நமக்கும் சொல்லி சென்றதை நாமும் நம் பிள்ளைகளுக்கு சொல்லி புரிய வைக்க வேண்டும். இது நம் பண்பாடு. நம் பண்பாடை நாம் தான் பாதுகாக்க வேண்டும்.

**நன்மையும் செல்வமும் நாளும் நல்குமே**
**இன்மையும் பாவமும் சிதைந்து தேயுமே**
**ஜென்மமும் மரணமும் இன்றித் தீருமே**
**இம்மையில் ராம என்றிரண்டெழுத்தினால்.**

# வாரியார் அருளியவை



1. எது தானம் – யாரிடமும் எதையும் கேட்காதிருப்பது.
2. யார் நண்பன் – நம்மை பாவம் செய்யாமல் தடுப்பவன்.
3. எது அலங்காரம் – சீலமான வாழ்வே அலங்காரம்.
4. எது வாக்கியத்திற்கு அலங்காரம் – சத்தியமான வார்த்தைகள்.
5. மின்னல் போல் தோன்றி மறைவது – தீயவர் நட்பு.
6. மனிதனுக்கு பாக்கியம் எது? – ஆரோக்கியமான வாழ்க்கை.
7. யார் பரிபூரணன் – நன் மக்கள் உடையவன்.
8. கஷ்டமான காரியம் எது? – மனதை அடக்கி வைப்பது.

# ஓர் வேண்டுகோள்

## விளம்பரம் அல்லது நன்கொடை
## கொடுத்து உதவுங்கள்

**வாசகர்கள் அன்பான கவனத்திற்கு**

கடந்த மூன்று ஆண்டுகளாக நமது மின்னிதழ் உலகளாவிய நகரத்தார் பெருமக்களுக்கு இலவச இதழாக சமூக வலைத்தளங்கள் மூலமாகவும் – மொபைல் செயலி (Mobile App) மூலமாகவும் மாதம் தோறும் வழங்கப்பட்டு வருகிறது. மின்னிதழை அனைவரும் தங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களுக்கு பகிர்கிறார்கள்.

நகரத்தாரின் பண்பாட்டினை இன்றைய தலைமுறையினர் அறியும் வண்ணமும், நகரத்தார்களின் வாசிப்பை வளர்க்கும் விதத்திலும் தொடரும் எங்களது முயற்சிக்கு தங்கள் அனைவரது ஆதரவும் அவசியம்.

இதழின் வளர்ச்சியில் தாங்களும் பங்கேற்கும் வகையில் விளம்பரங்களும், நன்கொடைகளையும் அளித்து உதவுங்கள்.

அலைபேசி எண்ணில் G Pay செய்ய:

**97917 76534**


**UPI Pin: senaadigital@okicici**

இதழில் விளம்பரம் செய்ய
கீழ்கண்ட எண்ணில் அழைக்கவும்.

**96590 32994**

# மழலை மழைத்துளிகள்..!!!

குழந்தைகளுக்காக எழுதப் பட்டாலும் அனைவருக்குமான கவிதைகளின் அணிவரிசை இந்த மழலை மழைத்துளிகள்



கல்லல்
மீ.மணிகண்டன்
Texas - USA


## ஏழு வண்ணம்




சிவப்பு மஞ்சள் செம்மஞ்சள்
… பச்சை நீலம் இளநீலம்
ஊதா ஏழு வண்ணத்தால்
… ஒன்றன் மேலே ஒன்றாக
அரைவட்டங்கள் வரைத்திடுங்கள்
… அழகிய வெள்ளைத் தாளினிலே
வரைந்தது என்ன பாருங்கள்
… வானவில் ஆனதைக் காணுங்கள்!

## காகிதக் கப்பல்

சின்னச் சின்னக் கப்பல்
… செய்து பார்ப்போம் நாங்கள்
காகிதம் எடுத்து மடித்தே
… கத்திக் கப்பல் செய்தே
காற்று வீசும் திசையை
… கவனம் கொண்டு மெதுவாய்
ஓடை மீது வைத்து
… ஓடச் செய்வோம் பாரீர்!






GET IT ON
Google Play

இப்போது உங்களின் மேம்பட்ட வாசிப்பு அனுபவத்திற்காக
நமது மின்னிதழ் மொபைல் செயலி வடிவில்

**Naam Nagarathar Mobile App**

இனி என்றும்.. எப்போதும்... உங்கள் கையில் எளிதாக...
இன்றே டவுன்லோட் செய்து வாசிப்பின்
உன்னத அனுபவத்தை பெற்றிடுங்கள்...

# வாங்க பேசலாம்..!

## (செட்டிநாட்டு வட்டாரச் சொற்கள்)

பகுதி –16



– பேரா. கு. அன்புமெய்யப்பன்
இராமசாமி தமிழ்க் கல்லூரி
காரைக்குடி

நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூகத்தால் மட்டும் தனித்துவமாகப பேசப்பட்ட, பேசப்படுகின்ற சொற்களைத் தற்காலத் தலைமுறையினருக்குக் கொண்டு சேர்ப்பதே இத்தொடரின் நோக்கம் ...வாங்க பேசலாம் ..!



### இற்றுப்போதல்

"தம்பி! நானும் எத்தனை தடவ சொல்லிட்டேன். குப்ப அள்ளுற குப்பத் தகரம் இத்துப் போச்சுன்னு, கல்லுக்கட்டி (காரைக்குடியில் உள்ள கடைப்பகுதி) போகையில புதுசு ஒன்னு வாங்கிட்டு வான்னு." என்பதில் உள்ள "இத்துப் போதல்" என்பது மருவிய வார்த்தை.



"இற்றுப் போதல்" என்பதே சரியான வார்த்தை. "நைந்து போதல்" என்பது அதற்கான பொருள்.

### இறுக்கம்

இச்சொல்லிற்கு இரண்டு பொருள்கள் கூறலாம். ஆத்தா! வள்ளி! சன்னலை எல்லாம் திறந்துவிடு! ஒரே இறுக்கமா இருக்கு" இங்கு சொல்லப்படும், "இறுக்கம்" என்பது "புழுக்கம்" என்று பொருள் தருகிறது. காற்று இல்லாததால் வியர்க்கின்ற தன்மையைக் குறிக்கிறது.



மற்றொன்று, "அண்ணே! இந்த மாசம் என்னால வட்டிக்காசத் தர முடியல. இறுக்கமா இருக்கு. அடுத்த மாசம் சேத்துத் தந்தர்ரேன்" என்று சொல்வதில் உள்ள "இறுக்கம்", "தட்டுப்பாடு", "பற்றாக்குறை" என்ற பொருள்களைத் தருகிறது.

### இறைத்தல்

"அழகப்பா! நானும் சொல்லிட்டேன். பணம் இருக்கேன்னு அள்ளி இறைக்காத. மக கலியாணத்துல தேவைப்படும் போது தடுமாறுவ. சொல்லிட்டேன். பாத்துக்க!" என்று மகன் மீதான அக்கறையில் அப்பச்சிகள் பேசுவார்கள். இங்கு சொல்லப்படும் "இறைத்தல்" என்பது பணத்தை மிகுதியாகச் செலவிடுவதைக் குறிக்கிறது.

### இன்றைக்கு

"இன்னைக்கு சிவன் கோயில்ல பிரதோஷம். சாயங்காலம் வீட்டுக்கு வந்ததும் என்னைய கூட்டிட்டு போயிட்டு வந்துடுய்யா!" என்ற ஆத்தாக்களின் நினைவூட்டல்களில் இருக்கும் "இன்னைக்கு" என்பது "இன்றைக்கு" என்ற சொல்லின் மருஉ. இன்று என்பதே இன்றைக்கு என்று பேச்சு வழக்கில் பயன்படுத்தப்படுகிறது.

### இன்னமும்

"ஏண்டா! பேராண்டி! அஞ்சு வருசமாப் படிக்கிறியே? இன்னமும் படிப்பு முடியலயா? வயசே போயிடும் போலயே?" என்று ஆயாக்கள் அறியாமல் கேட்பதுண்டு. "இன்னமும்" என்பது "இன்னும்" என்னும் சொல்லின் மருஉ.

### ஈயடிச்சான் காப்பி

"ஏண்டா ! பழநி ! சிதம்பரம் பய அவனோட நோட்டக் கொண்டாந்து காட்டுனான். நீ அவன் எழுதுனத அப்படியே ஈயடிச்சான் காப்பி பண்ணி வச்சிருக்க" என்பதில், ஈயடிச்சான் காப்பி என்பது ஏற்கெனவே எழுதப்பட்டிருக்கும் காகிதத்தில் இருப்பதை அப்படியே நகலெடுத்து எழுதுவது என்று பொருள் கூறலாம்.

பையன் ஒருவன் தான் எழுதியபின் நோட்டை (ஏட்டை) மூடி வைக்கும் போது பறந்து வந்த ஈ அதற்குள் அடிபட்டு இறந்து அப்பக்கத்தில் ஒட்டிக்கொண்டது. அதனை நகல் (காப்பி) எடுத்த மாணவன் குறிப்பிட்ட பக்கத்தில் ஈ ஒன்றைப் பிடித்து, அதனை உரிய இடத்தில் ஒட்ட வைத்தானம். இதனைத்தான் ஈயடிச்சான் காப்பி என்று குறிப்பிடுவர். மற்றொரு பழங்கதையும் குறிப்பிடப்படுகிறது.

ஒரு கிராமத்தில் பெரிய அக்ரஹாரம். அங்கு வைதீக விஷயங்கள், மந்திரங்கள் தெரியாத ஒருவர் எல்லா சடங்குகளும் தெரிந்தது போல நடிப்பார். தனிமையில் போய் சந்தியா வந்தனம் முதலிய கிரியைகள் செய்து வருவதாகச் சொல்லி ஊர் மக்களை ஏமாற்றி வந்தார்.



ஒரு சமயம், ஒரு முழு சூரிய கிரஹணம் வந்தது. அது போன்ற சமயங்களில் எல்லோரும் ஆற்றங்கரைக்குப் போய் தர்ப்பணம் செய்வது வழக்கம். ஆகையால் இந்த போலிப் பிராமணனும் அவர்களுடன் போக நேரிட்டது.



எல்லோரும் ஆற்றங்கரையில் தர்ப்பணம் பண்ணத் துவங்கினர். இவருக்குப் பயம்; இன்று நமது குட்டு வெளிப்பட்டு விடுமோ என்று அஞ்சிக் கொண்டிருந்தார். ஆகையால் மிகவும் கவனமாக அருகிலுள்ள பிராமணன் என்ன எல்லாம் செய்கிறார் என்று பார்த்து அதன் படியே செய்தார். மந்திரத்தை மட்டும் சொல்லுவது போல வாயை அசைத்து பாவனை செய்தார்.

அவர் பூணூலை இடம் மாற்றினால், இடப்பக்கமாகவும், வலம் மாற்றினால் வலப்பக்கமாகவும் மாற்றி விரைவாகச் செய்து கொண்டிருந்தார். இவருடைய துரதிஷ்டம், இவர் எந்தப் பிராமணனைப் பார்த்து தர்ப்பணம் செய்தாரோ அந்தப் பிராமணன் முதுகில் ஒரு ஈ வந்து உட்கார்ந்தது. அவர் ஓங்கி ஒரு அடி அடித்து அதை விரட்டினார். அதைப் பார்த்த போலி பிராமணனும் முதுகில் ஓங்கி அடித்துக் கொண்டார். மற்றொரு ஈ இன்னொரு பக்கம் உட்காரவே உண்மைப் பிராமணன் அந்தப் பக்க முதுகில் ஒரு அடி அடித்து ஈயை விரட்டினார். அதைப் பார்த்துக்கொண்டிருந்த போலி பிராமணன் அதைப் பார்த்து அப்படியே செய்ய எல்லோருக்கும் தெரிந்துவிட்டது.

சிலர் தைரியமாக அவரிடம் வந்து ஏனய்யா இப்படிச் செய்தீர்? என்று கேட்க, ஓ, அதுவா? எனக்கு ஈயடிக்கும் மந்திரத்தின் பொருள் தெரியாது; அவர்தான் ஈயடி தர்ப்பண மந்திரம் அறிந்தவர் என்று சொல்ல அனைவரும் 'கொல்' என்று சிரித்தனர். எல்லோரும் பிடிப்பதற்குள் அவர் ஓடிப் போய்விட்டார். தமிழில் 'ஈயடிச்சான் காப்பி' என்று ஒரு சொற்றொடர் உண்டு. இதை வைத்துத்தான் அந்த சொற்றொடரும் வந்திருக்கலாம் என்று இக்கதை கூறப்படுகிறது.

– தொடர்ந்து பேசுவோம்

# வாரியார் பொன்மொழி



வயலில் தூவப்படும் சில விதைகளே,
பல ஆயிரம் மடங்கு பயிர்களை
திருப்பித் தருகின்றன.
அதைப்போலவே, ஒருவர் செய்யும்
நன்மையும் தீமையும் அவர்கள்
செய்ததற்கு ஏற்றவகையில் பல
மடங்காகப் பெருகி அவரிடமே திரும்ப
வந்துசேரும்.

நாம் நகரத்தார் டெலிகிராம் சேனலில்
இணைந்து உங்கள் மொபைலிலேயே நமது
மின்னிதழை மாதமிரு முறை பெற்றிடுவீர்

t.me/naamnagarathar
Join Telegram

# காசி – இராமேஸ்வரம் தீர்த்தங்களை
## பரிமாறிக்கொள்ள ஆன்மீக வழிபாட்டு ஒப்பந்தம்

நாட்டுக்கோட்டை நகரத்தார்களால் பாரத தேசத்தில் வடக்கே காசி முதல் தெற்கே சேது வரை பற்பல புண்ணிய தலங்களில் பற்பல திருப்பணிகள் செய்யப்பட்டுள்ளன. நகரத்தார் செய்த மற்றும் செய்து வரும் திருப்பணிகளுள் மணிமகுடமாய் திகழ்வது காசி திருத்தலத்தில் காசிவிஸ்வநாதருக்கு நாள்தோறும் மூன்று வேளை செய்து வரும் பூஜையே! இது சுமார் 250 ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது.

தற்போது நகரத்தார் (AL. AR கட்டளை) சார்பில் புதிதாய் தொடங்கப்பட்டுள்ள புனிதநீர் பரிமாற்றம், மணி மகுடத்தில் ஒரு மாணிக்கமாக திகழ்கின்றது.

காசி யாத்திரை செல்பவர்கள் முதலில் இராமேஸ்வரத்தில் அக்னி தீர்த்தத்தில் நீராடி, மணல் மற்றும் கோடித்தீர்த்தத்தை எடுத்துக்கொண்டு காசி சென்று, கங்கையில் நீராடி மணலை கரைத்து, காசி விஸ்வநாதருக்கு கோடித்தீர்த்தத்தால் அபிஷேகம் செய்து, பிரயாகையில் திரிவேணி தீர்த்தம் எடுத்து வந்து, இராமநாதருக்கு அபிஷேகம் செய்து யாத்திரையை நிறைவு செய்வார்கள். விஸ்வநாதருக்கு கோடித்தீர்த்தத்திலும் இராமநாதருக்கு திரிவேணித்தீர்த்தத்திலும் அபிஷேகம் செய்வது பெரும் புண்ணியமாக கருதப்படுகிறது.



கடந்த பல ஆண்டுகளாக தேவகோட்டை ஜமீந்தார் குடும்பத்தாரின் AL.AR கட்டளை சார்பில் இராமேஸ்வரத்தில் இராமநாதருக்கு தினம்தோறும் மாலை திரிவேணித் தீர்த்தத்தால் அபிஷேகம் செய்யப்படுகிறது. தற்போது இதன் புதிய முகமாக காசியில் காசிவிஸ்வநாதருக்கு கோடித்தீர்த்தத்தால் அபிஷேகம் செய்யும் மரபு AL.AR கட்டளை சார்பில் தொடங்கப்பட்டுள்ளது. இதற்காக காசி விஸ்வநாதர் ஆலய அறக்கட்டளையுடன் ALAR கட்டளை இணைந்து திரிவேணி மற்றும் கோடித்தீர்த்தத்தை பரிமாறிக் கொள்ளும்ஆன்மீக வழிபாட்டு ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது.

கடந்த ஜூலை 28ஆம் தேதி காசி விஸ்வநாதர் கோயிலில் உத்தரபிரதேச மாநில முதலமைச்சர் மாண்புமிகு யோகி ஆதித்யநாத் அவர்களால் திரிவேணித்தீர்த்தம் கோவிலூர் மடாதிபதி ஸ்ரீலஸ்ரீ நாராயண ஞான தேசிக சுவாமிகள் முன்னிலையில் AL.AR கட்டளையின் பிரதிநிதி C.RM.அருணாச்சலம் செட்டியார் அவர்களிடம் வழங்கப்பட்டது.





ஆகஸ்ட் 9ஆம் தேதி காசி விஸ்வநாதருக்கு இராமேஸ்வரத்திலிருந்து கொண்டு செல்லப்பட்ட கோடித்தீர்த்தத்தால் சிறப்பு அபிஷேகம் செய்யப்பட்டது. இந்த வரலாற்று நிகழ்வில், இதற்கு மிகமுக்கிய காரணகர்த்தராக திகழ்ந்த கோவிலூர் மடாதிபதி ஸ்ரீலஸ்ரீ நாராயண ஞான தேசிக சுவாமிகள், ஸ்ரீகாசி விஸ்வநாதர் ஆலய அறக்கட்டளை தலைமை நிர்வாக அதிகாரி விஸ்வ பூஷன் மிஸ்ரா, AL.AR கட்டளையின் பிரதிநிதி C.RMஅருணாச்சலம் செட்டியார், வாரணாசி ஆட்சியாளர் இராஜலிங்கம் I.A.Sமற்றும் பலர் கலந்துகொண்டனர்.

தகவல் : கோவிலூர் மடாலயம்

நாம் நகரத்தார் டெலிகிராம் சேனலில் இணைந்து உங்கள் மொபைலிலேயே நமது மின்னிதழை மாதமிரு முறை பெற்றிடுவீர்

t.me/naamnagarathar

Join Telegram

# ஆசிரியர்



ஏட்டுக் கல்வி எளிதாக்கும் வித்தகர்
நாட்டு நடப்பை நயமாக இயம்புவர்
நன்னெறி போதிக்கும் நாணயம் மிகுந்தவர்
ஐயம் களைந்து அறிவு வளர்ப்பவர்
அன்பு கொண்டு அரவணைக்கும் அன்பாளர்
பகுத்தறிவு பாடம் புகட்டும் பண்பாளர்
தட்டிக் கொடுத்து தோள் கொடுப்பவர்
வெற்றிப் பாதைக்கு வழி வகுப்பவர்
கனிவும் கண்டிப்பும் நிரம்பக் கொண்டவர்
மாணாக்கர் முன்னேற்றம் கண்டு மகிழ்பவர்
சிந்தனையைத் தூண்டி கற்பிக்கும் சிறப்பு
ஊக்கம் உற்சாகம் அவர்தம் உடன்பிறப்பு
நல்லாசிரியர் நாட்டின் நாடித் துடிப்பு
அவர்பொருட்டு நாளைய சமுதாயம் காணும் களிப்பு



–அரு.சிவகாமி இராமனாதன்,
–ஒக்கூர்– நவிமும்பை



பெண் கதவு... ஆண் பூட்டு..! – 16

# உடனிருக்கும் உறவுகள்



நல்லாசிரியர்
சேவு.முத்துக்குமார்
காரைக்குடி
+91 94432 88931

கூட்டுக்குடும்பத்தில், மனைவி கணவனிடம் "விண்ணையும் நிலவையும் பிரிப்பது அமாவாசை; உன்னையும் என்னையும் பிரிப்பது உன் அம்மா ஆசை" வேதனையுடன் கூறினாள்.

கூட்டுக்குடும்பத்தில், மனைவி கணவனிடம் "விண்ணையும் நிலவையும் பிரிப்பது அமாவாசை; உன்னையும் என்னையும் பிரிப்பது உன் அம்மா ஆசை" வேதனையுடன் கூறினாள்.



தன் தாயை மதிப்பவளே தனக்கு மனைவியாக இருக்க முடியும் என்று கூறுகிறார் கவிஞர் கண்ணதாசன்.

"என்னுடைய தாயை நான் வணங்குகிறேன். எனக்கு வாழ்க்கைக்குத் துணையாக ஒரு மனைவி வந்திருந்தால் அவளும் அவளை வணங்கியாக வேண்டும். எனக்கு அவள் தருகின்ற இன்பங்களுக்காக என் தலைமீது ஏறி நின்று என் தாயாரை அவள் விலை பேச முடியாது. என்னுடைய தாய் என்பவள் தான் என் குடும்பத்தின் ராணி...அந்த ராணிக்கு தோழியே தான் என்

மனைவியே தவிர அந்த மனைவி என்பவள் ராணி அந்தஸ்தைப் பெற முடியாது. அவளுக்கு வருகின்ற மருமகளுக்கு வேண்டுமானால் அவள் ராணியாக இருக்கலாமே தவிர, என் தாய்க்கு அவள் தோழியாகத்தான் அடங்கி இருக்க முடியும். என் தாயை நான் வணங்கும்போது அவளும் வணங்கியாக வேண்டும். அப்படி வணங்க அவள் விரும்பவில்லை என்றால் என் மனைவியாக நான் அவளை அங்கீகரிக்க மாட்டேன்" என்பதே கவியரசரின் உறுதியான கூற்று.

பத்து மாதம் நம்மை சுமந்து பெற்று, பகலிரவாய் விழித்திருந்து வளர்த்து வித்தகனாய்க் கல்வி பெறச் செய்து, உலகில் நாம் சிறக்க உறுதுணையாக இருக்கும் தாய்க்கு நிகர் வேறுயாரும் இருக்க இயலாது. அதற்காக தாய் என்ற பெயரில் சில இல்லங்களில் பேய் நடமாடுவதையும், மருமகளை குறைகூறுவதையும் அங்கீகரிக்க முடியாது அல்லவா.



என்ன செய்தாலும் பொறுத்துப் போக இன்றைய மருமகள்கள் தயாராக இல்லை, காரணம் அவர்களில் பெரும்பாலோர் பொருளாதார சுதந்திரம் பெற்றுவிட்டார்கள். இருப்பினும் மனசாட்சிப்படி நம் நலன் விரும்பும், தாய் தந்தைக்கு மதிப்பு கொடுத்து, அவர்களின் ஆசி பெற்று, அவர்களின் அனுபவத்தைத் துணையாகக் கொண்டு வாழ்வதே நல்ல வாழ்க்கையாகும். நாம் கூடி வாழும் சமுதாயம், உறவுகளின் தேவையை உணர்ந்து அவர்களது சிறு சிறு குறைகளையும் பெரிதுபடுத்தாமல் அரவணைத்துச் செல்லுதல் அவசியம்.

கணவன் குடும்பத்தின் மீது மனைவிக்கும், மனைவி குடும்பத்தின் மீது கணவனுக்கும் மரியாதை வேண்டும், இன்பமும், துன்பமும் மாறி மாறி வரும் வாழ்வில், உறவினர் ஆதரவு மிக அவசியம்.

ஒரு மரத்துப்பறவைகளாய் இரைதேடிப் பிரிந்தாலும், பிரிந்த இடத்திற்கு மீண்டும் வந்து சேர வேண்டும். மாமா, மாமி, மச்சான், பெரியப்பா, பெரியம்மா, சித்தி, சித்தப்பா, பங்காளி என அன்பினால் பிணைக்கப்பட்ட வாழ்வு நம் வாழ்வு. சுயநலத்திற்காக ஒருவரிடம் இருந்து மற்றொருர் அனைத்தையும் பிரிப்பது தவறு, குழந்தைகளை குறைவாகக் பெற்றுக் கொள்ளும் இக்காலங்களில் நம் குழந்தைகளுக்கு உறவுகள் மிக மிக அவசியம், மூடி மூடி மனத்திற்குள் வைத்துக் கொண்டு வெந்து, நொந்து வாழ்வது நரகவாழ்க்கை. நல்லதோ, கெட்டதோ மனம்விட்டு பேசிவிட வேண்டும். ஈ.கோ. என்னும் அகந்தை தலை தூக்காமல் பார்ப்பதே இல்லற வாழ்வின் வெற்றி ஆகும். உறவுகள் இல்லாத வாழ்க்கை



பாலைவனத்துக்கு ஒப்பாகும். பாலைவனத்தை சோலைவனமாக்குவது ஒவ்வொரு ஆண் பெண் கைகளிலே தான் உள்ளது.

உறவுகள் நல்ல நாள், கெட்ட நாளுக்கு மட்டும் வந்தால் போதாது. எப்பொழுதும் நம் உடனிருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும். அதுவே மிகச் சிறந்த வாழ்க்கை, உறவுகளிடம் கணக்குப் பார்த்து செலவு செய்வது கூடாத காரியம், அவர்கள் தகுதியோடு நம் தகுதியை ஒப்பிட்டு, இல்லாமை நிறைந்த நிலையில் அவர்கள் நம்மோடு பயணப்பட்டால் நாமும் இல்லாதவர்களாகக் காட்டிக்கொள்ளக் கூடாது. அவ்வாறு காட்டினால், இல்லாதவர்களாகவே போய்விடும் நிலை உண்டாகும்.



நன்றி : ஓவியம்.மோகன் மணிமாலா

# உங்களுக்கு எதிரி 'நீங்கள்' தான்!



பொதுவாக நாம் தோல்வியைச் சந்திக்கிறபோது என்ன சொல்வோம் தெரியுமா?

"நேரம் சரியில்லை"
"பார்ட்னர் கால வாரிட்டார்"
"கஸ்டமர் பணம் தராம ஏமாத்திட்டார்"
"பொருள் கெட்டுப்போச்சு"
"பேங்க் கடன் தரலை"
"கவர்மெண்ட் சரியில்லை"
"பொருளாதாரம் மந்தமா இருக்கு"
"லேபர் கிடைக்கலை*




இந்தக் காரணங்கள் அனைத்தும் உண்மையாகக்கூட இருக்கலாம். ஆனால், நெஞ் சைத் தொட்டுச் சொல்லுங்கள்... உங்கள் போட்டியாளருக்கும் இவை அனைத்தும் பொருந்துமல்லவா?

அவரால் மட்டும் எப்படி வெற்றி பெற முடிகிறது?

உண்மை என்ன தெரியுமா? தோல்விக்குக் காரணம் 'நான்' தான் என்று ஏற்றுக் கொள்கிற பக்குவம் நமக்கு இல்லை.

புரிந்து கொள்ளுங்கள்... உங்களது ஒரு விரல், எதிராளியை நோக்கி 'உன்னால்தான் தவறு' என்று சுட்டும்போது, மூன்று விரல்கள் உங்களை நோக்கி 'அதற்கு நீயும் உடந்தை' என்று சொல்லிக்கொண்டேயிருப்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஒரு விஞ்ஞானி உலகத்திலேயே மிகவும் சக்தி வாய்ந்த ரோபோட் ஒன்றைக் கண்டுபிடித்தார். அந்த ரோபோட் பன்முகத் தன்மை கொண்டது. ஆடும், பாடும், சிரிக்கும், பேசும், நடக்கும், கம்ப்யூட்டரை இயக்கும், ஸ்மார்ட் போனைப் பயன்படுத்தும், வாகனம் ஓட்டும்... இப்படி எல்லா வேலைகளையும் செய்தது.



இதைப் பார்த்து ஆச்சரியப்பட்டுப்போன பத்திரிக்கையாளர்கள் கேட்டனர்.

"அப்படியானால் நமது வேலை வாய்ப்பெல்லாம் பறிபோய்விடுமா?"

அதற்கு அந்த விஞ்ஞானி, "ஆம்! உண்மைதான். இந்த ரோபாட்டை விட, தான் ஆயிரம் மடங்கு சக்தி வாய்ந்தவன் என்பதை மனிதன் உணராதவரை" என்றார் நக்கலாக.

உண்மைதான். நம் ஒவொருவருக்குள்ளும் ஆயிரம் மடங்கு சக்தி வாய்ந்த, பன்முகத் தன்மை கொண்ட ரோபோட்டின் திறன் இருக்கிறது. இந்த அருமை தெரியாமல் நாம் ஒரே இடத்திலேயே அமர்ந்து, ஒரே வேலையைச் செய்து பெஞ்சை தேய்த்துக் கொண்டு இருக்கிறோம்.

நாம் மாற வேண்டிய தருணம் வந்துவிட்டது. நாம் இப்போது செய்யக்கூடிய வேலையை விட, இன்னும் பெரிய சாதனைகளை உருவாக்கப் படைக்கப்பட்டிருக்கிறோம்.

ரோபோட்டுகளை கம்ப்யூட்டர் புரோகிராம்கள் இயக்குவது போல, மனிதர்களை இயங்குபவை எவை தெரியுமா? அவர்களின் எண்ணங்கள் தான்.



சிவாஜிராவ் ரஜினிகாந்த ஆனதற்கும், பரமக்குடி சிறுவன் கமல்ஹாசன் ஆனதற்கும், விராட் கோலி உலக சாதனைகள் நிகழ்த்தியதற்கும் காரணம், அவர்களின் எண்ணங்கள்தான்.

நீங்கள் மாற வேண்டிய நேரமிது. நீங்கள் பிறர் மீது குற்றம் சொல்வதைத் தவிர்த்துவிட்டு, உங்கள் மீது நம்பிக்கை வைக்கத் தொடங்குங்கள். உங்கள் எண்ணங்கள்தான் உங்களை வெற்றிப் பாதைக்கு இட்டுச் செல்லும் என்பதை உறுதியாக நம்புங்கள்.

உங்கள் இலக்குகளும், எண்ணங்களும் ஒரே நேர்கோட்டில் இருந்தால் உங்கள் வெற்றி நிச்சயம் சாத்தியப்படும்.

'100 கோடி ரூபாய் சம்பாதிக்க வேண்டும்' என்பது உங்கள் இலக்காக இருந்து, 'இதெல்லாம் என்னால் முடியாது' என்பது உங்கள் எண்ணமாக இருந்தால், உங்கள் முன்னேற்றத்திற்கு நீங்களே எதிரி ஆவீர்கள். எனவே, இரண்டும் ஒரே நேர்கோட்டில் இருக்க வேண்டியது அவசியம்.



இலக்குகள், துல்லியமாகவும் (Specific), அளக்கக் கூடியதாகவும் (Measurable), செயல் திட்டம் கொண்டதாகவும் (Action Plan), நடைமுறைச் சாத்தியம் உள்ளதாகவும் (Realistic), காலத்தோடும் (Time Line) இருந்தால், அவை நம்முடைய எண்ணங்களை நேர்மறையாக மாற்றும்.

இப்படி வரையறுக்கப்படும் இலக்குகளுக்கு SMART Goals என்று பெயர்.




உதாரணமாக, 'நான் வீடு வாங்கப் போகிறேன்' என்று இலக்கினை வரையறுக்காமல், 'நான் 2030–ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் தேதி மாலை 6 மணிக்குள், திருச்சியில் 1200 சதுர அடி பரப்பளவு கொண்ட ஒரு வீட்டிற்குச் சொந்தக்காரனாவேன்' என்று வரையறுத்தால் அதனை அடைய எண்ணங்களும் கைகொடுக்கும்.

எனவே நீங்கள் புரிந்துகொள்ள வேண்டியது எண்ணங்களை பயன்படுத்தினால் நீங்கள் வெற்றியாளராகலாம். இல்லையென்றால் உங்களுக்கு எதிரி நீங்கள் தான்.

நன்றி : திரு. P. K. பிரசன்ன வெங்கடேசன் – Success Coach

# ஏ.வி.எம்
## என்றொரு சகாப்தம்

ஏ.வி.எம் என்பது நிலையான மூன்றெழுத்து
அவர் சினிமாத்துறை மொழியின் உயிரெழுத்து

ஏ.வி.எம் என்றாலே மாபெரும் சகாப்தம்
சத்தமின்றி சாதனைகள் செய்யும் அவரது நிசப்தம்

அடையாளத்திற்காக அல்ல அன்பிற்காக அழைக்கப்பட்டார் செட்டியார்
விருதுகளை குவிப்பதிலே இவரை வெல்ல புவியினில் வேறு யார்?

தேவகோட்டை ரஸ்தாவில் அன்றே படப்பிடிப்புத் தளம் தொடங்கி
இன்றைக்கும் போற்றும் வண்ணம் சிறந்த படங்களை வாரி வழங்கி

தொடர்ந்து வடபழனியில் சிறப்பாய் படப்பிடிப்புத் தளம் அமைத்து
வெள்ளி விழாத் திரைப்படங்களை வெண்திரையில் விதை தூவி வளர்த்து

முடியும் என்று முயற்சியின் அசலாய் நம் முன் நின்றவர்
முப்பொழுதும் நற்சிந்தனையால் செல்லுலாய்டு சினிமாவை வென்றவர்

சிறந்த படங்களை எடுப்பதிலே அவர் சிகரம் தொட்டவர்
அடுத்தவரும் பிழைக்க எண்ணி கொஞ்சம் இடைவெளி விட்டவர்

சிவாஜி கண்ட சாம்ராஜ்யம் நாம் அறிவோம் அனைவரும்
சிவாஜியை கண்ட சாம்ராஜ்யம் நல் ஏ.வி.எம் நிறுவனம்

ஏ.வி.எம் அவர்களிடம் தெரிவது கலைத்தாயின் சாயல்
ஏ.வி.எம் நிறுவனம் நமக்கு கலைத்தாயின் கோவில்

ஏ.வி.எம் தலைமுறைகள் தொடர்ந்து படங்களை எடுக்கட்டும்
சாதனைப் படங்களை அவர்கள் சரம் சரமாய் தொடுக்கட்டும்.



– கவிஞர் எம்.சோலை.
காரைக்குடி



# மலேசிய தன வைசிய சங்கம்
# கல்வி பூஜை 2025




மலேசிய தன வைசிய சங்கத்தின் (மலேசிய நகரத்தார் சங்கம்) ஏற்பாட்டில் ஆண்டு தோறும் மலேசிய திரு நாட்டில் உள்ள நகரத்தார் கோவில்களில் கல்வி பூஜை நடைபெறும்.முதல் கட்டமாக மேல் உள்ள கோவில்களில் நடை பெற உள்ளது.அதன் துவக்க பூஜை இன்று 2.8.2025 சனிக்கிழமை காலை காலை சிரம்பான் நகரத்தார் செல்வ விநாயகர் கோவிலிலும் மாலை கிள்ளான் நகரத்தார் தண்டாயுதபாணி கோவிலும் நடைபெற்றது.




மாணவ மாணவிகளும் அவர்கள் பெற்றோர்களும் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.மலேசியாவில் உள்ள அனைத்து நகரத்தார்கள் கோவில்களிலும் இந்த பூஜைகள் நடைபெற்று இந்த ஆண்டு கல்வி பூஜையின் பூர்த்தி விழா கோலாலம்பூர் நகர தண்டாயுதபாணி ஆலயத்தில் நிறைவு பெற்றது.




# பக்கோடா மோர்குழம்பு

என்ன தான் நிறைய காய்கறிகள் இருந்தாலும், அந்த காய்கறிகள் நாம் சமைக்க நினைக்கும் போது வீட்டில் இருக்காது. அப்போது கடைக்கு சென்று வாங்கி வந்து சமைக்க சோம்பேறித்தனமாக இருக்கும். தினமும் மதிய வேளையில் என்ன சமைப்பது என்று யோசித்து முடிவெடுப்பது ஒரு பெரிய வேலையாக இருக்கும்.

ஆனால் ஒரு சில சிம்பிளான ரெசிபிக்களை தெரிந்து வைத்துக் கொண்டால், சமைக்க சோம்பேறித்தனமாக இருக்கும் வேளையில் டக்கென்று செய்து முடித்துவிடலாம் அல்லவா? அப்படி குழம்புகளில் மிகவும் ஈஸியானது மோர்குழம்பு. இந்த மோர்குழம்பை சற்று வித்தியாசமாக செய்ய நினைத்தால், அத்துடன் பக்கோடாவை சேர்த்துக் கொள்ளுங்கள். இந்த பக்கோடா மோர் குழம்பு சாதத்துடன் சேர்த்து சாப்பிட அருமையாக இருக்கும். மேலும் இது செய்வதற்கு சுலபமாகவும் இருக்கும்.

உங்களுக்கு பக்கோடா மோர்குழம்பை எப்படி செய்வதென்று தெரிந்து கொள்ள வேண்டுமா? இந்த மாத இதழில் பக்கோடா மோர் குழம்பு ரெசிபியின் எளிய செய்முறை கொடுக்கப்பட்டுள்ளது.

அதைப் படித்து செய்து சுவைத்து எப்படி இருந்தது என்று எங்களுடன் உங்கள் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.

**தேவையான பொருட்கள்:**

- தேங்காய் – 4 டேபிள் ஸ்பூன்
- சீரகம் – 1/2 டீஸ்பூன்
- பச்சை மிளகாய் – 2
- பூண்டு – 2 பல்
- கடுகு – 1/4 டீஸ்பூன்
- சின்ன வெங்காயம் – 4–5
- தண்ணீர் – சிறிது
- தயிர் – 1/2 லிட்டர்
- மஞ்சள் தூள் – 1/4 டீஸ்பூன்
- உப்பு – சுவைக்கேற்ப

**பக்கோடாவிற்கு...**

- பெரிய வெங்காயம் – 2 (நீளவாக்கில் நறுக்கியது)
- பஜ்ஜி மாவு – 2 டேபிள் ஸ்பூன்
- உப்பு – சுவைக்கேற்ப
- எண்ணெய் – பொரிப்பதற்கு தேவையான அளவு

**தாளிப்பதற்கு...**

- எண்ணெய் – 3 டீஸ்பூன்
- கடுகு – 1/2 டீஸ்பூன்
- சீரகம் – 1/4 டீஸ்பூன்
- வெந்தயம் – 1/4 டீஸ்பூன்
- பெருங்காயத் தூள் – 1/4 டீஸ்பூன்
- கறிவேப்பிலை – 1 கொத்து
- வரமிளகாய் – 2
- சின்ன வெங்காயம் – 50 கிராம் (நறுக்கியது)

**செய்முறை:**



- முதலில் ஒரு பாத்திரத்தில் நறுக்கிய வெங்காயத்தை போட்டு, அத்துடன் பஜ்ஜி மாவை சேர்த்து, சுவைக்கேற்ப உப்பு தூவி, நீரை ஊற்றி பக்கோடா பதத்திற்கு பிரட்டி, 5 நிமிடம் ஊற வைக்க வேண்டும்.
- பின்னர் மிக்சர் ஜாரில் துருவிய தேங்காய், சீரகம், பச்சை மிளகாய், பூண்டு, கடுகு, சின்ன வெங்காயம் சேர்த்து, சிறிது நீரை ஊற்றி நன்கு மென்மையாக அரைத்துக் கொள்ள வேண்டும்.
- பின்பு 1/2 லிட்டர் தயிரை நன்கு அடித்துக் கொள்ள வேண்டும்.
- பின் அதில் அரைத்ததை ஊற்றி, அத்துடன் மஞ்சள் தூள் மற்றும் சுவைக்கேற்ப உப்பு சேர்த்து கலந்து கொள்ள வேண்டும்.
- பிறகு ஒரு வாணலியை அடுப்பில் வைத்து, அதில் பொரிப்பதற்கு தேவையான அளவு எண்ணெய் ஊற்றி சூடானதும், பிரட்டி வைத்துள்ள பக்கோடா கலவையை கொஞ்சம் கொஞ்சமாக எடுத்து எண்ணெயில் போட்டு, பொன்னிறமாக ப்ரை செய்து ஒரு தட்டில் எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும்.

- பின்னர் ஒரு வாணலியை அடுப்பில் வைத்து, அதில் குழம்பு தாளிப்பதற்கு எண்ணெய் ஊற்றி சூடானதும், கடுகு, சீரகம், வெந்தயம், பெருங்காயத் தூள், கறிவேப்பிலை, வரமிளகாய் சேர்த்து தாளிக்க வேண்டும்.

- அதன் பின் அதில் பொடியாக நறுக்கிய சின்ன வெங்காயத்தை சேர்த்து கண்ணாடி பதத்திற்கு வதக்கி, பின் கலந்து வைத்துள்ள தயிரை ஊற்றி, 1 நிமிடம் சூடேற்றி அடுப்பை அணைத்துவிட்டு குழம்பை இறக்கி, செய்து வைத்துள்ள பக்கோடாக்களை சேர்த்து கலந்து, கொத்தமல்லியைத் தூவி, சிறிது நேரம் மூடி வைத்து ஊற வைத்து, அதன் பின் பரிமாறினால், சுவையான பக்கோடா மோர்குழம்பு தயார்.

**கட்டுரையாக்கம்:**

**உமாராணி சொக்கலிங்கம்.**
**நற்சாந்துபட்டி ஈரோடு.**






இந்தப் பகுதியில் நா ஊறும் நகரத்தார் ரெசிபிகளுடன், நம் ஆச்சிகளின் கைப்பக்குவ உணவு வகைகளின் செய்முறையினை அறியலாம். வாசகர்கள் தங்கள் ரெசிப்பிகள் இந்தப் பகுதியில் இடம் பெற செய்ய தங்களின் படைப்புகளை தங்களது விவரங்களுடன் naamnagarathar@outlook.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும் அல்லது 9791776534 என்ற எண்ணிற்கு வாட்சப் செய்யவும்

நாம் நகரத்தார் டெலிகிராம் சேனலில் இணைந்து உங்கள் மொபைலிலேயே நமது மின்னிதழை மாதமிரு முறை பெற்றிடுவீர்

t.me/naamnagarathar

Join Telegram

# NAGARATHAAR KAPITAL

(Will learn and earn together in wealth creating Journey)

## Webinar Course.

I. Stock Market Course (Beginners).
Basics, Fundamentals, Technical (Introduction).

II. Stock Market Course (Advanced).
Technical, Strategies.

## Why One Wealth Course?

Learn from Qualified and Experienced Expert Panelists.
Your search for in-depth Knowledge ends here.
You will become a Professional trader and Informed Investor.
Assist to Develops investment strategies to achieving financial goals
Got Learn about Different Market.
Personalized financial advice.

## Who can join?

I. Students.
II. Professionals from other sectors who want to become Part time and Full time Trader.
III. Professionals from other sectors who want to formulate their Portfolio. House Wife.
IV. Anyone who wants to make a career in Equity / Commodity / Currency Trading / to become Investment Advisor / to become Financial Advisors.

Our "Young Generation" can learn and start doing analysis to identify potential stocks @ Correct Entry / Correct Exit to win the Trade and by Investing in turn around stocks to create wealth by their own in reasonable period of time.

**Webinar Dates** Every month will post it on our NAGARATHAAR KAPITAL Forum
For September 2025 Class will be on 09/09/2025 & 10/09/2025

**Webinar Timings** India Time: 17:30Hrs - 18.30Hrs / 21.00 - 22.00Hrs, On Week days & 17.00Hrs - 18.00Hrs / 20.00 - 21.00Hrs Week Ends.

# For further Details Contact: +91-9790755337 +91-9884072224

nagarathar.capital@gmail.com

# பணம் சம்பாதிப்போம் பங்குச் சந்தையில்...

நமது நாம் நகரத்தார் மின்னிதழ் வாசகர்கள் பயன் பெறும் வகையில் சென்னை நகரத்தார் கேப்பிட்டல் நிபுணர்கள் எழுதும் இந்த தொடரில் பங்குசந்தை தொடர்பான அடிப்படைகளையும், ஒவ்வொரு மாதமும் ஒரு நிறுவனம் குறித்த பகுப்பாய்வினையையும், குறுகிய கால பங்குகளுக்கான பரிந்துரைகளையும் பார்க்கலாம்.

**இந்த இதழில் ஒரு நிறுவனத்தை பற்றிய விரிவான பகுத்தாய்வு.**

கார்த்திக் முத்தப்பன் ( கண்டனூர் ) நகரத்தார் கேப்பிட்டல் – சென்னை

INDO FARM EQUIPMENT LIMITED

INDO FARM EQUIPMENT LIMITED (544328/INDOFARM)

1994 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட இந்தோ ஃபார்ம் எக்யூப்மென்ட் லிமிடெட், இமாச்சலப் பிரதேசத்தின் பத்தியில் அமைந்துள்ள ஒரு புகழ்பெற்ற ஐஎஸ்ஓ–சான்றிதழ் பெற்ற கிரேன் மற்றும் டிராக்டர் உற்பத்தி நிறுவனமாகும். அதன் உற்பத்தி நடவடிக்கைகள் 2000 ஆம் ஆண்டு முதல் உர்சஸ் (போலந்து) உடனான தொழில்நுட்ப ஒத்துழைப்பு மூலம் தொடங்கப்பட்டன. இப்போது, இந்தோ ஃபார்ம் உலகத் தரம் வாய்ந்த விவசாய டிராக்டர்கள், கிரேன்கள் மற்றும் பல்வேறு விவசாய கருவிகளின் முன்னணி உற்பத்தியாளராக உள்ளது.

நிறுவனத்தின் அதிநவீன உற்பத்தி வசதி 34 ஏக்கர் பரப்பளவில் பரந்து விரிந்துள்ளது, இது 20 HP முதல் 110 HP வரையிலான விவசாய டிராக்டர் மாடல்களை வடிவமைக்க அர்ப்பணிக்கப்பட்டுள்ளது, பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்ய ஏராளமான வகைகளைக் கொண்டுள்ளது. ஆண்டுக்கு 18,000 டிராக்டர்கள், 2,400 கிரேன்கள் மற்றும் 20,000 இயந்திரங்களின் நிறுவப்பட்ட திறனுடன், இந்தோ ஃபார்ம் சிறந்து விளங்க உறுதிபூண்டுள்ளது.

நிறுவனத்தின் மேம்பட்ட ஃபவுண்டரி, தூண்டல் உலைகளுடன் பொருத்தப்பட்டுள்ளது, சிறந்த தரத்தை உறுதி செய்வது மட்டுமல்லாமல், தடையற்ற விநியோகங்களுக்கு உத்தரவாதம் அளிக்கிறது மற்றும் இந்தியாவை சக்திவாய்ந்த டிராக்டர்கள் மற்றும் கிரேன்களாக மாற்றுகிறது. 2008 ஆம் ஆண்டில் ஒரு மூலோபாய நடவடிக்கையாக, இந்தோ ஃபார்ம் 9 டன் முதல் 30 டன் வரையிலான திறன் கொண்ட பிக்–என்–கேரி கிரேன்களின் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தலை

உள்ளடக்கியதாக அதன் இலாகாவை பன்முகப்படுத்தியது. இந்த விரிவாக்கம் புதுமை மற்றும் சந்தையின் வளர்ந்து வரும் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான இந்தோ ஃபார்மின் அர்ப்பணிப்பைக் காட்டுகிறது.

இந்த நிறுவனம் 6 பிராந்திய அலுவலகங்கள் மற்றும் விற்பனை மற்றும் சேவைக்காக 173 வலுவான டீலர் நெட்வொர்க் மூலம் செயல்படுகிறது.

நிறுவனம் ஆண்டுக்கு 12,000 டிராக்டர்கள் மற்றும் 1,280 கிரேன்களின் நிறுவப்பட்ட திறன் கொண்டது. 150 க்கும் மேற்பட்ட நவீன இயந்திரங்கள், SPMகள் மற்றும் சமீபத்திய CNC இயந்திர மையங்களைக் கொண்ட அதிநவீன இயந்திரக் கடை, சிலிண்டர் ஹெட்ஸ், பிளாக்ஸ், டிரான்ஸ்மிஷன் ஹவுசிங்ஸ், கியர் பாக்ஸ்கள், ஹைட்ராலிக் ஹவுசிங்ஸ், ஆக்சில் டியூப்கள், டிஃபெரன்ஷியல் கேஜ்கள், டைமிங் கேஸ்கள் & கவர்கள், ஃப்ளைவீல் ஹவுசிங்ஸ் போன்ற சிறந்த தரமான கூறுகளை உற்பத்தி செய்கிறது. 2006இல் தொடங்கப்பட்ட நிறுவனத்திற்கு சொந்தமான ஃபவுண்டரி யூனிட். சிறந்த தயாரிப்பு தரத்தை உறுதி செய்கிறது.

நிறுவனத்தின் வசதிகள் தூண்டல் உலைகள், நியூமேடிக் மோல்டிங் இயந்திரங்கள், தானியங்கி மோல்டிங் லைன், மணல் ஆலை, முழுமையாக பொருத்தப்பட்ட உலோகவியல் மற்றும் மணல் சோதனை ஆய்வகம், இயந்திர மையம், கியர் கடை, பிரஸ் கடை, ஃபேப்ரிகேஷன் கடை, பெயிண்ட் கடை, அசெம்பிளி யூனிட், தர அறை மற்றும் பயன்பாட்டு அறை ஆகியவற்றைக் கொண்டுள்ளன.

அதன் ஒருங்கிணைந்த செயல்பாடுகள், மூன்றாம் தரப்பினரைச் சார்ந்திருப்பதைக் குறைக்கும், அதன் உற்பத்தி செயல்முறையை நெறிப்படுத்தும் மற்றும் அதன் செயல்பாட்டுத் திறனை மேம்படுத்தும் சில முக்கியமான இயந்திர கூறுகளை வீட்டிலேயே தயாரிக்க உதவுகின்றன. கூடுதலாக, இது முழு உற்பத்தி செயல்முறையின் மீதும் கட்டுப்பாட்டைப் பராமரிக்கவும், அதன் வாடிக்கையாளர்களுக்கு சிறந்த விநியோக காலக்கெடுவை மிகவும் போட்டி விலையில் வழங்கவும் உதவுகிறது.

இந்தோ ஃபார்ம் எக்யூப்மென்ட் லிமிடெட், செங்குத்து ஒருங்கிணைப்பு வணிக மாதிரியின் கீழ் செயல்படுகிறது. இந்த செங்குத்து ஒருங்கிணைப்பு, 330 க்கும் மேற்பட்ட டிராக்டர் கூறுகள் மற்றும் 190 கிரேன் கூறுகளை உள்நாட்டில் உற்பத்தி செய்ய உதவுகிறது, இதில் சிலிண்டர் தொகுதிகள், டிரான்ஸ்மிஷன் ஹவுசிங்ஸ் மற்றும் ஹைட்ராலிக் வின்ச்கள் போன்ற முக்கியமான பாகங்கள் அடங்கும், இது செலவுத் திறன், தரக் கட்டுப்பாடு மற்றும் நெறிப்படுத்தப்பட்ட உற்பத்தி நேரக் கோடுகளை உறுதி செய்கிறது. மேம்பட்ட ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு திறன்களுடன் பொருத்தப்பட்ட, மேம்பட்ட எரிபொருள் செயல்திறனுக்காக மறு-நுழைவு வகை எரிப்பு அறைகள் போன்ற உள்நாட்டு தொழில்நுட்பங்களை உருவாக்கியுள்ளது. பின்தங்கிய ஒருங்கிணைப்பு பல்வேறு தயாரிப்பு வரம்பை ஆதரிக்கிறது, செயல்பாட்டு செயல்திறனை மேம்படுத்துகிறது மற்றும் மூன்றாம் தரப்பு சார்புநிலையைக் குறைக்கிறது, இதனால் அவை டிராக்டர் மற்றும் கிரேன் பிரிவுகளில் செலவு மற்றும் தரத்தில் மிகவும் போட்டித்தன்மை வாய்ந்ததாக ஆக்குகின்றன.

இந்தோ ஃபார்ம் எக்யூப்மென்ட் லிமிடெட், 2WD மற்றும் 4WD உள்ளமைவில் 16HP முதல் 10HP வரை பரந்த அளவிலான டிராக்டர்களை வழங்குகிறது. 65, 75, 90 மற்றும் 110 HP டிராக்டர்கள் உள்ளிட்ட முக்கிய மாதிரிகள், ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்கா, மத்திய கிழக்கு மற்றும் ஆசியா போன்ற ஏற்றுமதி சந்தைகளுக்காக உருவாக்கப்படுகின்றன. கூடுதலாக, 1,026 (26 HP) மாடல் ஐரோப்பிய சந்தைக்காக குறிப்பாக வடிவமைக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

பிக்–அண்ட்–கேரி கிரேன் பிரிவில், IFEL 2WD மற்றும் 4WD வகைகளில் 9 டன் முதல் 30 டன் வரை திறன் கொண்ட கிரேன்களை உற்பத்தி செய்கிறது. பாதுகாப்பு, செயல்திறன் மற்றும் உற்பத்தித்திறனுக்கு பெயர் பெற்ற இந்த கிரேன்கள், பொறியியல், கட்டுமானம், உள்கட்டமைப்பு மற்றும் சுரங்கம் போன்ற தொழில்களுக்கு சேவை செய்கின்றன. உள்கட்டமைப்பு மேம்பாட்டின் வளர்ந்து வரும் தேவைகளைப் பூர்த்தி செய்யும் அதே வேளையில், அவற்றின் பல்துறைத்திறன் ஆபரேட்டர் செயல்திறனை மேம்படுத்துகிறது. நிறுவப்பட்ட உள்கட்டமைப்பு மற்றும் மாறுபட்ட தயாரிப்பு வரிசையுடன், இந்தோ ஃபார்ம் எக்யூப்மென்ட் லிமிடெட் விரைவாக அளவிடுவதற்கு நன்கு நிலைநிறுத்தப்பட்டுள்ளது, உள்நாட்டு மற்றும் உலகளாவிய சந்தைகளில் உள்ள வாய்ப்புகளைப் பயன்படுத்துவதற்கு பங்கு உட்செலுத்தலைப் பயன்படுத்துகிறது.

ஏற்றுமதிகள் தற்போதுஇந்தோ ஃபார்ம் எக்யூப்மென்ட் லிமிடெட், மொத்த விற்பனையில் தோராயமாக 7% பங்களிக்கின்றன.

இருப்பினும், பல நாடுகளில் தயாரிப்பு ஏற்றுக்கொள்ளலின் வலுவான பதிவு நிறுவனத்தின் ஈர்க்கக்கூடிய சர்வதேச தடத்தை எடுத்துக்காட்டுகிறது. ஆப்கானிஸ்தான், அல்ஜீரியா, பங்களாதேஷ், பெல்ஜியம், பூட்டான், பிரேசில், சிலி, எத்தியோப்பியா, காபோன், ஜெர்மனி, கானா, ஹங்கேரி, இத்தாலி, ஜப்பான், ஜோர்டான், கென்யா, குவைத், லெபனான், மலாவி, மொரிஷியஸ், மெக்ஸிகோ, மியான்மர், நமீபியா, நேபாளம், நெதர்லாந்து, நைஜீரியா, ஓமன், போலந்து, தான்சானியா, சவுதி அரேபியா, ஸ்பெயின், சூடான், சிரியா, யுனைடெட் கிங்டம், உருகுவே, உகாண்டா, ஏமன் மற்றும் ஜிம்பாப்வே உள்ளிட்ட பல்வேறு சந்தைகளில் நிறுவனம் முன்னிலையில் உள்ளது.

நிறுவனத்தின் தயாரிப்புகளில் டிராக்டர்கள் (1,2,3,4 –சீரிஸ்) போன்ற விவசாய உபகரணங்கள், ரோட்டரி டில்லர்கள், அறுவடை இயந்திரங்கள் மற்றும் கிரேன்கள் போன்ற கட்டுமான உபகரணங்கள் அடங்கும்.

நிறுவனம் எஞ்சின் தொழில்நுட்பத்தில் முக்கிய சாதனைகளைச் செய்துள்ளது, அவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

2–சீரிஸ் டிராக்டர்களுக்கான உயர்தர டிராக்டர் என்ஜின்களை உற்பத்தி செய்வதற்கான தொழில்நுட்பத்தை உள்நாட்டு மயமாக்குதல். இந்த தொழில்நுட்பம் ஆரம்பத்தில் போலந்தின் URSUS இலிருந்து பெறப்பட்டது.

எங்கள் 3–சீரிஸ் டிராக்டர் மற்றும் கிரேன் மாடல்களில் பயன்படுத்தப்படும் 3–சிலிண்டர் மற்றும் 4–சிலிண்டர் என இரண்டு புதிய உயர் செயல்திறன் கொண்ட இயந்திரங்களை உருவாக்குதல்.

அதிக எரிபொருள் செயல்திறனை அளிக்கும் சிறந்த காற்று–எரிபொருள் கலவைக்காக ஒரு மறு–நுழைவு எரிப்பு அறையை வடிவமைத்தல்.

## அடிப்படைக் கண்ணோட்டம்:–

நிறுவனத்தின் ஒருங்கிணைந்த EPS 4.90 (2025–03 அன்று முடிவடையும் பன்னிரண்டு மாதங்கள் பின்தங்கிய நிலையில்), ஒருங்கிணைந்த PE விகிதம் 17.25 தொழில்துறை PE உடன் ஒப்பிடும்போது 38.57 ஆகும். (நிறுவனம் மிகவும் புதிதாக பட்டியலிடப்பட்டுள்ளதால், இந்த எண்ணிக்கை இன்னும் சில காலாண்டுகளில் மாறுகிறது என்பது என் கருத்து). நிறுவனத்தின் முக மதிப்பு 10 ஆகும்.

சமீபத்திய தரவுகளின்படி, முன்னெடுப்பாளர்கள் மற்றும் முன்னெடுப்பாளர் குழு 69.44% பங்குகளை வைத்திருக்கிறது. நெஜென் அன்டிஸ்கவர்டு வேல்யூ ஃபண்ட் இதில் 1.99% பங்குகளையும் கொண்டுள்ளது.

## நிறுவனஅடிப்படைகள்:–

**Key Metrics**

| | |
|---|---|
| PE Ratio (x)<br>42.83 | EPS - TTM (₹)<br>5.52 |
| MCap (₹ Cr.)<br>1,136.04 | Sectoral MCap Rank<br>123 |
| PB Ratio (x)<br>2.09 | Div Yield (%)<br>0.00 |
| Face Value (₹)<br>10.00 | Beta<br>- |
| VWAP (₹)<br>244.39 | 52W H/L (₹)<br>293.20 / 136.80 |

**Indo Farm Equipment Share Price Returns**

| | |
|---|---|
| 1 Day | ↑2.24% |
| 1 Week | ^19.16% |
| 1 Month | ^10.59% |
| 3 Months | ^49.18% |
| 1 Year | N.A. |
| 3 Years | N.A. |
| 5 Years | N.A. |

## Employee & Interest Expense

The company has spent 6.18% of its operating revenues towards interest expenses and 11.82% towards employee cost in the year ending Mar 31, 2025. (Source: Consolidated Financials)

## Indo Farm Equipment Share Price Update

Indo Farm Equipment Ltd. share price moved up by 2.24% from its previous close of Rs 231.25. Indo Farm Equipment Ltd. stock last traded price is 236.42

## நிறுவன நிதி நிலை:–

**Indo Farm Equipment Financials**

Income (P&L) | Balance Sheet | Cash Flow | Ratios — CONSOLIDATED

**INSIGHTS**

**Employee & Interest Expense**

Company has spent 6.18% of its operating revenues towards interest expenses and 11.82% towards employee cost in the year ending Mar 31, 2025. (Source: Consolidated Financials)

| QUARTERLY \| ANNUAL | JUN 2025 | MAR 2025 | DEC 2024 | SEP 2024 |
|---|---|---|---|---|
| Total Income | 98.02 | 131.58 | 96.30 | 86.39 |
| Total Income Growth (%) | ↓-25.51 | ↑36.63 | ↑11.47 | ↑14.37 |
| Total Expenses | 86.08 | 114.55 | 84.08 | 75.65 |
| Total Expenses Growth (%) | ↓-24.85 | ↑36.23 | ↑11.15 | ↑15.57 |
| EBIT | 11.93 | 17.03 | 12.22 | 10.74 |
| EBIT Growth (%) | ↓-29.94 | ↑39.35 | ↑13.74 | ↑6.55 |
| Profit after Tax (PAT) | 5.43 | 13.51 | 3.98 | 3.60 |
| PAT Growth (%) | ↓-59.78 | ↑239.32 | ↑10.61 | ↑46.69 |
| EBIT Margin (%) | 12.17 | 12.94 | 12.69 | 12.44 |
| Net Profit Margin (%) | 5.54 | 10.27 | 4.13 | 4.17 |
| Basic EPS (₹) | 1.13 | 3.27 | 1.01 | 0.91 |

## பணியாளர் மற்றும் வட்டி செலவு:–

மார்ச் 31, 2025 உடன் முடிவடைந்த ஆண்டில், நிறுவனம் தனது இயக்க வருவாயில் 6.18% வட்டிச் செலவுகளுக்காகவும், 11.82% பணியாளர் செலவுகளுக்காகவும் செலவிட்டுள்ளது. (மூலம்: ஒருங்கிணைந்த நிதியியல்)

Income (P&L) | Balance Sheet | Cash Flow | Ratios — CONSOLIDATED

| ANNUAL | FY 2025 | FY 2024 | FY 2023 | FY 2022 | FY 2021 |
|---|---|---|---|---|---|
| Total Assets | 761.89 | 647.95 | 622.84 | 619.60 | 550.38 |
| Total Assets Growth (%) | ↑17.59 | ↑4.03 | ↑0.52 | ↑12.58 | ↑28.27 |
| Total Liabilities | 230.54 | 330.89 | 332.28 | 343.74 | 287.72 |
| Total Liabilities Growth (%) | ↓-30.33 | ↓-0.42 | ↓-3.33 | ↑19.47 | ↑21.36 |
| Total Equity | 531.35 | 317.06 | 290.57 | 275.87 | 262.66 |
| Total Equity Growth (%) | ↑67.58 | ↑9.12 | ↑5.33 | ↑5.03 | ↑36.82 |
| Current Ratio (x) | 2.79 | 1.50 | 1.43 | 1.45 | 1.49 |
| Total Debt to Equity (x) | 0.32 | 0.85 | 0.97 | 0.87 | 0.79 |
| Contingent Liabilities | 0.00 | - | - | - | - |

Income (P&L) | Balance Sheet | Cash Flow | Ratios — CONSOLIDATED

**INSIGHTS**

**Increase in Cash from Investing**

Company has used Rs 80.62 cr for investing activities which is an YoY increase of 3016.7%. (Source: Consolidated Financials)

| ANNUAL | FY 2025 | FY 2024 | FY 2023 | FY 2022 | FY 2021 |
|---|---|---|---|---|---|
| Net Cash flow from Operating Activities | 53.00 | 40.58 | 30.18 | 0.30 | 11.60 |
| Net Cash used in Investing Activities | -80.62 | -2.59 | -8.38 | -25.51 | -16.15 |
| Net Cash flow from Financing Activities | 67.93 | -25.70 | -21.99 | 25.77 | 5.21 |
| Net Cash Flow | 40.31 | 12.30 | -0.19 | 0.56 | 0.66 |
| Closing Cash & Cash Equivalent | 59.60 | 14.06 | 1.76 | 3.90 | 3.34 |
| Closing Cash & Cash Equivalent Growth (%) | ↑323.99 | ↑699.32 | ↓-54.89 | ↑16.72 | ↑28.23 |
| Total Debt/ CFO (x) | 3.24 | 6.67 | 9.30 | 799.20 | 17.81 |

## முதலீட்டிலிருந்து ரொக்கத்தில் அதிகரிப்பு:–

நிறுவனம் முதலீட்டு நடவடிக்கைகளுக்கு ரூ.80.62 கோடியைப் பயன்படுத்தியுள்ளது, இது ஆண்டுக்கு ஆண்டு 3016. 7% அதிகரிப்பு ஆகும். (மூலம்: ஒருங்கிணைந்த நிதியியல்)

Income (P&L) | Balance Sheet | Cash Flow | Ratios | CONSOLIDATED

| ANNUAL | FY 2025 | FY 2024 | FY 2023 | FY 2022 | FY 2021 |
|---|---|---|---|---|---|
| Return on Equity (%) | 4.43 | 4.85 | 5.25 | 4.78 | 3.26 |
| Return on Capital Employed (%) | 8.39 | 12.71 | 12.30 | 10.37 | 8.97 |
| Return on Assets (%) | 3.09 | 2.37 | 2.45 | 2.13 | 1.55 |
| Interest Coverage Ratio (x) | 2.55 | 2.21 | 2.12 | 2.15 | 1.94 |
| Asset Turnover Ratio (x) | 0.55 | 0.59 | 0.60 | 0.60 | 0.55 |
| Price to Earnings (x) | 31.65 | - | - | - | - |
| Price to Book (x) | 1.40 | - | - | - | - |
| EV/EBITDA (x) | 13.21 | - | - | - | - |
| EBITDA Margin (%) | 15.72 | 16.66 | 15.83 | 14.53 | 15.39 |

## விளக்கப்படம் தொழில்நுட்பங்கள்:–




## சக நிருவன ஒப்பீடு:–

### Indo Farm Equipment Peer Comparison

Indo Farm Equipment Stock Performance | Ratio Performance | CHART | TABLE

Indo Farm Equipment ... | Escorts Kubota Ltd. X | Mahindra & Mahindra ... X | Swaraj Engines Ltd. X | Eicher Motors Ltd. X

1D 1W 1M 3M 6M 1Y 5Y




Indo Farm Equipment Stock Performance | Ratio Performance | SEE ALL PARAMETERS

| NAME | | P/E (X) | P/B (X) | ROE % | ROA % | REV CAGR [3YR] | OPM |
|---|---|---|---|---|---|---|---|
| Indo Farm Equipment Ltd. | | 42.83 | 2.14 | 4.43 | 3.09 | 3.37 | 12.93 |
| Eicher Motors | X | 33.87 | 7.69 | 22.23 | 17.42 | 23.13 | 28.02 |
| Escorts | X | 16.95 | 3.86 | 12.20 | 9.65 | 12.68 | 13.50 |
| M&M | X | 30.57 | 4.71 | 16.78 | 4.65 | 20.76 | 16.77 |
| Swaraj Engines | X | 28.98 | 11.94 | 39.59 | 24.69 | 13.80 | 13.28 |

## பங்குதாரர் முறை:–

### Indo Farm Equipment Shareholding Pattern


QOQ Change | Total Shareholdings




*Showing Indo Farm Equipment Shareholding as on Jun 2025*

| CATEGORY | JUN 2025 | MAR 2025 |
|---|---|---|
| Promoters | 69.44 | 69.44 |
| Pledge | 0.00 | 0.00 |
| FII | 0.55 | 0.82 |
| DII | 4.07 | 4.19 |
| Mutual Funds | 0.00 | 0.00 |
| Others | 25.93 | 25.55 |

QOQ Change | Total Shareholdings




| CATEGORY | NO. OF SHARES | PERCENTAGE | % CHANGE QOQ |
|---|---|---|---|
| Promoters | 3,33,67,640 | 69.44 % | 0.00 |
| Pledge | 0 | 0.00 % | 0.00 |
| FII | 2,63,144 | 0.55 % | -0.27 |
| DII | 19,54,905 | 4.07 % | -0.12 |
| Others | 1,24,65,911 | 25.93 % | ↑0.38 |

## தனிப்பட்ட பார்வை:–

நிறுவனம் வேகமாக வளர்ந்து வரும் டிராக்டர்கள் மற்றும் கிரேன்கள் உற்பத்தியாளர்களில் ஒன்றாகும், இது வீட்டு ஒருங்கிணைப்பு, நிறுவனத்தின் அடிப்படைகள் மற்றும் நிதி அளவுருக்களில் வலுவானது, ஏனெனில் இது புதிதாக பட்டியலிடப்பட்டுள்ளது, ஆனால் நன்றாகத் தெரிகிறது. தனிப்பட்ட ஆய்வின்படி, நடுத்தர கால (8 மாதங்கள் முதல் 1.5 ஆண்டுகள் வரை) முதல் நீண்ட கால (2 முதல் 3 ஆண்டுகள் வரை) முதலீட்டிற்கு நல்லது என்று ஆய்வுக் கண்ணோட்டத்தில் தெரிகிறது. நடுத்தர கால ஆய்வுக் கண்ணோட்டத்தில் 315+ஐக் காணலாம். நீண்ட கால ஆய்வுக் கண்ணோட்டத்தில் 500+ ஐ எதிர்பார்க்கலாம்.

## இந்த இதழில் எமது ஆய்வு பார்வையில் குறுகிய கால பங்குகள் பரிந்துரைகள் :

க.ஹர்ஷவர்த்தினிஸ்ரீ ( நெற்குப்பை ) நகரத்தார்கேப்பிட்டல் – சென்னை

1, Ramky Infrastructure Ltd...
Entry 580 - 590. Target 630 and 690

2, Premier Explosives Ltd...
Entry 500 - 510. Target 600 and 670

3, Aarti Industries Ltd...
Entry 380 - 385. Target 430 and 450

4, TCPL Packaging Ltd...
Entry 3450 - 3480. Target 3700 and 4000

5, Balu Forge Industries Ltd...
Entry 600 - 610. Target 660 and 720

6, Indo Farm Equipment Ltd...
Entry 220 - 230. Target 250 and 290.

7, Shanthi Gears Ltd...
Entry 570 - 580. Target 620 and 660

8, Transrail Lighting Ltd...
Entry 780 - 790. Target 880 and 980

9, Yatra Online Ltd...
Entry 150 - 155. Target 180 and 200

10, Time Technoplast Ltd...
Entry 470 - 480. Target 540 and 600.

11, ELGI Equipments Ltd...
Entry 500 - 510. Target 580 and 620

12, Suraj Estate Developers Ltd...
Entry... 320-330. Target 370 and 400.

**பொறுப்புத் துறப்பு**

கட்டுரையாளர் செபியில் பதிவு செய்யப்பட்ட ஆய்வாளர் அல்ல. இடுகையிடப்பட்ட விளக்கங்கள் / நிலைகள் / பங்குகள் பற்றிய தனிப்பட்ட ஆய்வு. இந்தப் பட்டியல் முற்றிலும் ஆய்வுப் பகிர்வுக்காகவே, வாங்கவோ விற்கவோ எந்தப் பரிந்துரையும் இல்லை. தனிநபர் உங்கள் சொந்த விருப்பத்தின்படி முடிவு எடுக்க வேண்டும் யாரேனும் சுயமாக எந்த ஒரு வர்த்தக நடவடிக்கையையும் மேற்கொண்டால், எந்தவிதமான இழப்புகளுக்கும் லாபத்திற்கும் கட்டுரையாளர் / நாம்நகரத்தார் மின்னிதழோ பொறுப்பல்ல..!! இது முற்றிலும் ஒருவரின் சொந்த நடவடிக்கை மற்றும் விருப்பம். எந்த விதமான சட்ட நடவடிக்கைகளும் ஏற்றுக்கொள்ளப்படாது.

# நீங்கள் எப்படி......
# கும்ப லக்னம்..!



-ஜோதிடர் எல்லி
9894176494



நாம் நகரத்தார் மின்னிதழில் பயணிக்கும் வாசகர்கள் அனைவருக்கும் நெஞ்சார்ந்த வணக்கம்!

இரவும் பகலும் மாறி மீண்டும் மீண்டும் வந்து போகிறது!. இந்த பிரபஞ்சம் சற்றும் தளராமல் தன் கடமையை செய்து கொண்டே போகிறது. அடுத்தடுத்த நிகழ்வுகளை அது நகர்த்தி கொண்டே இருக்கிறது.

மனிதர்களாகிய நாம் தான் நாளை என்பதை நோக்கியே பயணிக்கிறோம். நடப்பவை நல்லவையாக இருக்க வேண்டும் என்பது அனைவரின் விருப்பமாக உள்ளது. இந்த பிரபஞ்சம் ஒவ்வொருவருக்கும் வெவ்வேறான அனுபவங்களை கொடுக்கிறது. ஒரு சம்பவம் அவரவர்களின் மனதை பொறுத்துஅதன் தன்மையில் மாறுபடுகிறது. ஆன்மாக்களின் கர்ம வினை படி நால்வகை தோற்றம், எழுவகை பிறப்பு, எண்பத்து நான்கு இலட்சம் உருவ வேற்றுமைகளோடு பிறப்பதாக சைவ சித்தாந்த சாத்திரங்கள் உரைக்கிறது.

அதனை தேடியே ஜோதிட ஆய்வுகள் நீள்கிறது.

நம் இதழில் இதுவரையில் மேஷம் தொடங்கி மகரம் வரையிலான லக்னங்கள் பற்றி பார்த்தோம். இந்த இதழில் கும்ப லக்னம் பற்றி காண்போம்.



கும்பம் காலப்புருஷ தத்துவத்தின் படி 11வது பாவகம்! கர்ம பலன்களை அளிக்கும் சனி பகவான் ஆட்சி வீடு!. இது உபஜெய ஸ்தானங்களில் ஒன்று மற்றவை 3 மற்றும் 6 ஆகும்.

கும்பம் மகரம் என இரண்டு வீடுகளுக்கும் சனி பகவானே அதிபதியாக வந்தாலும் இரண்டு வீடுகளுக்குமான யோக பலன்கள் என்பது ஆதிபத்தியம் காரணமாக மாறுபடும். இதனால் தான் ஜாதகரின் குணாதிசயங்களும் வேறுபடுகிறது.



கும்பத்தை விட மகர லக்னத்திற்கு சனி மற்றும் சுக்கிரன் முழு யோகர்களாக விளங்குவதும் பலன்களின் மாறுபாட்டிற்கு வழிவகை செய்கிறது. கும்பத்திற்கு சனியின் நட்பு கிரகங்கள் இருவேறு சுப அசுப ஆதிபத்ய பலன்களை கலந்து செய்வதால் இந்நிலை ஏற்படுகிறது!

இந்த லக்னகாரர்கள் பொதுவாக நல்ல உழைப்பாளிகள், எனினும் அதே வேளையில் சோம்பலிலும் மூழ்கி போவதும் உண்டு. அவ்வப்போது தாமதம், சோம்பல் உடையவர்கள்!. நேர்மையாக இருக்க விரும்புவார்கள்.

விடாப்பிடியான குணம், எதற்கும் வளைந்து கொடுக்காத தன்மை, கால சூழலுக்கு தகுந்தவாறு மாற்றத்தை செய்வதில் உடன்பாடு இல்லாமை இவைகள் தான் இவர்களின் சுபாவம்.

தந்தையாருக்கும் இவர்களுக்குமான உறவு சிறப்பாக இருக்காது! ஜாதகர் மீது தந்தையாருக்கு நல்ல நம்பிக்கை இராது! மகனை சரி வர ஏற்றுகொள்ளாமல் குறைகூறி வருவார்கள். இல்லையெனில் ஜாதகர் தந்தையாரை அலட்சியமாக நினைப்பார்!. குடும்ப பொறுப்பை வலிய போய் சுமந்து கொண்டு அவதிபடுவார்கள் இவர்கள்.



ஆயினும் கும்ப லக்னகாரர்கள் வாழ்வில் தந்தையார் மகன் உறவை பொறுத்தவரையில் ஒருவித பிணைப்பு திரைமறையாக இருந்து கொண்டே இருக்கும்!.

இவர்கள் வேண்டியவர்களின் அறிவுரைகளையும் கண்டு கொள்வதில்லை! பிடிக்காதவர்களின் இகழ்ச்சி களையும் செவிமடுப்பதில்லை. இவர்கள் சமாதானம் செய்ய வலிந்து சென்று சண்டைஅதிகரிக்க காரணமாய் போய்விடுவதும் உண்டு!

சிலர் தீவிரமான பக்தி ஈடுபாடுகளில் நாட்டம் கொண்டவராகவும் சிலர் மனசாட்சியை மட்டுமே ஏற்று கொண்டு ஆன்மீக விஷயங்களில் விருப்பங்கள் இல்லாமலும் இருப்பதை காணலாம். பக்தி மார்க்கம் இவர்களுக்கு நல்ல வலிமையைக் கொடுக்கிறது. பல கும்ப லக்னகார்கள் தீவிர முருக பக்தர்களாக இருப்பதுண்டு.

எதிரிகளை பற்றி கவனம் செலுத்த மாட்டார்கள்!. கிரகங்கள் அமர்வு இயற்கையாகவே கும்ப லக்னத்திற்கு சிக்கல்களுக்கு மத்தியில் இருப்பதால் மற்றவர்களால் விமர்சிக்கபடுவது தவிர்க்க இயலாதது.

அடுத்து நவ கிரகங்கள் இவர்களுக்கு எந்த தன்மை யில் பலன்கள் செய்யும் என்பதை பார்க்கலாம்.



## சனி :

இயற்கை அசுபராக அறியப்படும் சனி பகவான் தான் லக்னாதிபதி கூடவே விரையம் மற்றும் மோட்ச ஸ்தானத்திற்கும் அதிபதி ஆகிறார். இரு ஆதிபத்திய பலன்களை யும் கலந்தே செய்கிறார் இவர் ஜாதகத்தில் வலுப்பெறத்தான் வேண்டும்.

இவர் 3 ல் நீசம் அடைதல் நல்லதல்ல! மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் 1,5,9 போன்ற ஸ்தானங்களில் அமர்வது நல்லது!. இருப்பினும் இருக்கும் இடத்தை சற்று பாதிக்கவே செய்வார்.

ஆறில் அமர்வது கடன், வழக்கு சம்மந்த வகையில் தொழில், வேலை அமையும். கூடவே சந்திரன் சேர்க்கை பெறும் போது மனம் ஒருவித சஞ்சலத்துடனே பயணிக்கும். சதா எண்ண அலைகளுடனேயே பயணிக்கும் நிலை கூட ஏற்படலாம்.

## கேது :

கும்ப லக்னத்திற்கு பொதுவாக இவர் நற்பலன்கள் அளிப்பதில்லை சுபர் பார்வை யோக கிரகங்கள் நட்சத்திரசாரம் பெற்றால் பலன்கள் மாறுபடும். இரண்டில் நிற்கும் போது, இளமைகால வாழ்க்கை, ஆரம்பக்கல்வி யில் தாக்கத்தை ஏற்படுத்துவார், பற்களில் ஒழுங்கற்ற தன்மை, பிரச்சினைகள் வரலாம்.

## செவ்வாய் :

சனி பகவானின் பகை கிரகமான செவ்வாய் இயல்பாகவே கும்ப லக்னத்திற்கு நன்மை அளிப்பவர் இல்லை தான். செவ்வாய் காரகங்களில் லாபமின்மை இருக்கும். செவ்வாய் கோணத்தில் இருந்து குரு பார்வை செய்வது தீவிர ஆன்மீக பக்தி தவ வலிமையை கொடுக்கும்.

ஆறில் நீசம் பெறுவது ஜாதகருக்கு நல்லது என்றாலும் இளைய சகோதரத்தை பாதிக்கும். பொதுவாக 10,11ம் ஸ்தானங்களில் அமரலாம்.

## சுக்கிரன் :

இயற்கை சுபரான சுக்கிரன் 4,9 என்கிற இரண்டு சுப ஆதிபத்ய அதிபதிகளாக வருகிறார். கும்பம் ஸ்திர லக்னம் என்பதால் பாதகாதிபதி யும் இவர்தான். இவர் மறைதலோ நீசம் பெறவோ இல்லாமல் சுபர் சம்மந்தம் பெற்று கோணங்களில் அமர்வது நல்லது. 1,4,5ல் அமரலாம்



## குரு :

முழு முதற் சுபரான குரு பகவான் கும்பத்திற்கு சுபர் அல்ல! 2,11 க்குடைய குரு தனித்து இருப்பது நல்லதல்ல. 9ம் வீட்டில் இருக்கலாம். குரு சந்திரன் இணைந்து சுபத்துவம் அடைந்தால் சுப பலன்கள் உண்டு.

## புதன் :

கும்பத்திற்கு சுபர்கள் அசுப ஆதிபத்யமும் பெறுவார்கள் என்பது விதி அந்த வகையில் பூர்வ புண்ணிய ஸ்தானாதிபதி புதன் அட்டமாதி பதியாக வும் வருவதால் நிற்கும் நிலையை பொறுத்து தான் பலன்கள் கொடுப்பார். கோணங்களில் அமர்வது சிறப்பு லக்ன சுபர்களுடன் கூடுவதும் யோகம்.

## சந்திரன் :

ஆறாம் அதிபதி சந்திரன் புதன் உடன் சேரும் போது வியாபாரம் கைகொடுக்கும்.


## ராகு :

தனக்கு உரிய 3,6, போன்ற பாவகங்களில் இருப்பது நல்லது ராகு கேது க்களுக்கு சொந்த வீடுகள் இல்லாததால் பொதுவாக தாங்கள் நிற்கும் வீட்டின் பலன்களையும், சாரம் வாங்கிய கிரக ஆத்பத்ய காரக பலன்களையே யே செய்யும்.

இது வரையிலும் சனி பகவானின் திரிகோண வீடான கும்ப லக்னம் பற்றி அறிந்து கொண்டோம்.

மீண்டும் அடுத்த இதழில் சந்திக்கலாம்.

இராமநாதபுரத்தில் வசிக்கும் ஜோதிடர் எல்லி சட்டம் பயின்றவர். ஜோதிடம், தத்துவம் மற்றும் வரலாறு ஆகியவற்றில் நிபுணத்துவம் கொண்ட இவர் ஜோதிடம் தொடர்பான ஆய்வுக் கட்டுரைகளை இணையத்தில் தொடர்ந்து எழுதும் டிஜிட்டல் ஜோதிட விற்பன்னர் தொடர்புக்கு : 9894176494



# நாம் நகரத்தார்

சமூக இணையதள மின்னிதழ்

நகரத்தார்களின் வாசிப்பின் ஓர் அங்கமாக
வணிகம், இலக்கியம், ஆன்மீகம், பண்பாடு, வாழ்வியல்
மற்றும் நிகழ்வுகள் ஆகிய தகவல்களை தாங்கி
தேர்ந்தெடுக்கப்பட்ட வாசிப்புகளின்
பெட்டகமாக ஓர் மின்னிதழ்.

மாதந்தோறும் இலவசமாக இணையவழி மற்றும்
உங்கள் கைபேசி வாயிலாக...

நாம் நகரத்தார் மின்னிதழை செலவின்றி உங்கள்
மொபைலில் வாசிக்க, உங்கள் விருப்பத்தை கீழ் உள்ள
எண்ணுக்கு வாட்ஸாப் மூலம் தெரியப்படுத்துங்கள்,

# 97917 76534

www.naamnagarathar.com